310

ஸம்புடம் 11 }
ஸஞ்சிகை 4 }

ஸ்ரீ:

{ நந்தன வரு
{ சித்திரை மீ

29 APR 1952
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

பந்திருக்கும் மெல்விரலாள் பாவை பனிமலராள்
வந்திருக்கும்மார்வன் நீலமேனிமணிவண்ணன்
அந்தரத்தில்வாழும் வானோர் நாயகனாயமைந்த
இந்திரற்கும்தம்பெருமா னெவ்வுள்கிடந்தானே
[பெ-திரு- 2-2-9]

தனிப்ரதி விலை 0-4-0

{ APRIL 1952
{ VOL 11 NO 4.

விஷய ஸூசிகை

விஷயம் | பக்கம்

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ... 68

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

2. பெரிய திருமொழி ... 71

[ஸ்ரீ. உப. ஒரகடம் K. ஸுதர்சனாசார்யர், ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]

3. சென்றுகாண்டற்கரியகோயில் ... 75

[ஸ்ரீ. உப. பாதூர் தூப்புல் ராமபத்ராசார்ய ஸ்வாமி, வ்யாகரண சிரோமணி,
வேதாந்த வித்வான், ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.]

4. ஸௌஜந்யபரிமளம் ... 79

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி]

5. உபயவேதாந்த ஐககண்ட்யம் ... 84

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L. அட்வோகேட், திருச்சி.]

6. எம்பெருமானாருடைய ஸ்ரீஸூக்திகளும் ஸ்ரீதேசிகனும் 87

[ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

7. ஸம்பாதகரின் குறிப்புகள் ... 91

8. ஸத்க்ருத்யம் ... 93

[ஸ்ரீ. உப. மாடபூசி புராணம் வடூஜர் ஸ்ரீ. ராமபத்ராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ ஸந்நிதி
ஆராதகர். ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.]

9. சாஸ்த்ராநுபந்தம்

(1) உபாயத்வம்

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 } நந்தன ௵ சித்திரை ௴ { ஸஞ்சிகை 4

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌮𑍍
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக, வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

‘த்விஜிஹ்வ’ என்பதால் அப்பாம்புகளின் நாக்குகள் பிதுங்கி வெளிவருகின்றன என்று ஸூசநம். ‘ஆகல்ப’ என்பது ஆபரணம். இப்பாம்புகள் ஆபரணமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. விஷாயஃபோணஃஸடாவாடிகா-பாம்புகளை ஆபரணமாகக் கட்டினதற்கு இப்பொழுது சிறந்த அலங்காரப்ரயோஜநம் ஸித்திக்கிறது. படங்கள் இந்த பயங்கரப் பீடையவஸரத்தில் விரிகின்றன. ஸடா-படங்கள், வாடிகா-இவை ஒரு கோர்வையாக-வரிசையாக இருக்கின்றன. படங்கள் வரிசையில் அவற்றிலுள்ள சிரோரத்நங்கள் வரிசை வரிசையான தீபங்களாகின்றன. பாம்புகளின் தலைகளாடுகையில் இந்த தீபங்களால் ஆலத்திவழிப்பது போலிருக்கிறது. ரத்நரோசிஸ்ஃடாராஜி-ரத்ந காந்திகளின் ஸமூஹங்களின் சோபைகளால் நீராஜிதம்-ஆலத்திவலம் செய்யப்பட்டவர். ராஜவாஹநக்குதிரைகளுக்கு நீராஜநம் செய்வர். பகவானுடைய வாஹநமாகிய (ஔபவாஹ்யமாகிய) இவருக்கு நீராஜநமங்களம். இருபத்நிகளும் சேர்ந்து ஆலிங்கநம் செய்கிறார்கள். அவர்களுக்குள் ‘ஸாபத்நம்’ (சக்களத்திப் பொறாமை) யென்பதேயில்லை. ‘ருத்ரா’ ‘ருத்ர:’ என்று ஸஹஸ்ரநாம நாமத்தில் ‘பகவானை நினைக்கையிலேயே ஆநந்தக்கண்ணீர் பெருகுவதால் அவருக்கு ருத்ரர் என்று திருநாமம்’ என்று பட்டர்பாஷ்யம். ‘ரோதயதி இதி ருத்ர:’ இவள் வேதபுருஷபத்நீ. பகவத்குணங்களை விளக்குவதால் ஆநந்தக்கண்ணீர் பெருகச்செய்பவள். ச்ருதிதேவி ஸூக்தி-வேதம் பகவானுக்கு த்வஜம். வேதாத்மாவான் வைநதேயர் பகவானுடைய வைஜயந்தி. வேதத்தின் கந்தம் (பரிமளம் அபூர்வம்.) அது வெகுதூரம் கஸ்தூரிகாமோதம்போல் வாஸிக்கும். வேதஸ்ரீயால் பகவானுடைய யசஸ் (ஸத்கீர்த்தி) வெகுதூரம் வாஸிக்கிறது. ‘தஸ்ய நாம மஹத்யஸ:’ ‘வேதஸ்ருங்காரஸ்ஃவாடிகா ரூஃஸுபர்ணஸ்ரீவாஹநஃபாதுவஃ’ என்கிற பஞ்சாசத்து 37-வது ச்லோகத்தில் இந்த நீராஜநம் நடப்பது வர்ணிக்கப்பட்டுள்ளது. அதனடுத்த ச்லோகத்தில் ருத்ராதேவியின்காடோபகூடாலிங்கநமும் வர்ணித்துளது. காளியசிரோமர்தநநர்த்தநத்தில் கண்ணன் திருவடிகளுக்கு அவனுடைய 101-சிரோரத்நதீபங்களின் நீராஜநம் சுகரால் வர்ணிக்கப்பட்டுளது. ‘நாகசாமயேவ நீராஜநம் பவதா நீ:’ என்கிற தசாவதார ச்லோகத்திலும் அது ஸூசிக்கப்பட்டதை முன்பே 6-வது அங்கத்தில் விஸ்தரித்துள்ளோம். அங்கும் ‘ஸாரஸ்ஃடாவாடிகா’ என்று பாடியது கவநிக்கத்தக்கது. கருடருடைய சிரஸிலிருக்கும் அலங்காரஸர்பங்களின் சிரோரத்நதீபங்கள், பாஞ்சராத்ராகமங்களை இந்த வேதஸ்வரூபர் கேட்டு தலையாட்டிக்கொண்டு ஆடுகையில் அந்த ஆகம ஸ்ரீஸூக்திகளுக்கு ஆராத்ரிகமங்களமெடுப்பதுபோலிருக்கிறதென்று 2-ம் அங்கம் 85-ம் ச்லோகத்தில் பாடியுள்ளதை முன்பே விவரித்துள்ளோம். ‘ஸாராத்ரிகாஸூக்தய:’ என்று அங்கே ச்லோக முடிவு.

ஜயமநஸஃவணஃ-இது இரண்டாவது தண்டகம். ‘ஜய’ என்று நேரிலழைத்துப் பல்லாண்டு பாடுகிறார். இவருக்கு என்ன நிவேதநம் செய்கிறது? இவருக்கு தார்வீகபங்களென்ற பாம்புகள் ஆஹாரம். நாமெப்படி அவைகளை நிவேதநம் செய்வோம்? நாம் பாம்பைப் பிடித்துப் பெட்டியிலடைப்பவரில்லை. ‘தவீகராஹார’ தார்வீகரம்-ஸர்ப்பம். தர்வீ-என்பது விரித்த படம். படத்தை எடுத்து விரித்திருக்குந் தசையில் அதை அமுது செய்வர். அந்த விரித்த பட தசையோடு உயிர் ஸர்ப்பத்தை நாம் நிவேதநம் செய்வது ஸாத்யமல்ல. ‘தேவாதிவாஹார ஹாரிந்-ஸுரநாயகனை இந்த்ரனிடமிருந்து அவனுண்ணும் அம்ருதம் நிரம்பிய கலசத்தைப் பிடுங்கிவந்தவர். விஷம் அம்ருதம் இரண்டுமிவருக்கு ஸமம். தீவளகஸ்ருதிகீஷிவத்

[illegible]-ஸர்வலோகாதிபதி தன்பேரில் ப்ரயோகித்த வஜ்ராயுதத்தின் கூரினாலேற்பட்ட ரணத்தழும்பை ஆபரணமாகவுடையவர். உயிர் ஸர்ப்பங்களுமாபரணம். வஜ்ராயுதத்தழும்புமாபரணம். இவருக்கு இஷ்டமான திருவாபரணங்களை நாம் எப்படி ஸமர்ப்பிப்பது? [illegible]-அஸுரர்களோடு யுத்தத்திற்கு பகவான் செல்லுகையில் வாஹநமான இவருடையவேகத்தில் கல்பமுடிவில்ப்ரளயாரம்பத்தில் புயல் காற்றின் வேகக்ஷோபம்போலிருக்கிறது. [illegible] - அந்தப் போர்களிலிவருடைய வீரசமத்காரங்களத்புதம். [illegible]-தைத்யாரி என்று பகவானுடைய ரூடித் திருநாமம். அவர் யுத்தத்திற்குப் புறப்படுகையில் இவர் பேரில் ஆரோஹம். இவர் பகவானுடைய த்வஜம். த்வஜயந்தீ. யுத்தத்திற்குப் புறப்படுகையிலேயே ஜயக்கொடி நிறுத்தி நாட்டுவது முடிந்து போகிறது. சண்டை நடக்கும்வரையில் ஜயக்கொடி நாட்டுவதற்குக் காக்கவேண்டியதில்லை. இவர் பேரில் ஏறுகையிலேயே ஜயம் நிச்சயமாகி ஜயக்கொடி ஆகாசத்தில் விச்வம் முழுவதும் பறக்கிறதென்று ரஸம். [illegible]-ஸங்கர்ஷணரென்னும் பகவானுடைய ரூபமிவர். '[illegible]' என்று பஞ்சாசத்து 4-வது ச்லோகத்தில் ஹரி என்றும் கருடன் என்றும் ஏறுகிறவரென்றும் ஏறப்படுகிறவாஹநரென்றும் வேற்றுமைத் தன்மை விளையாட்டுடையவரும், தனக்கே தான் அதிநாயும் இருப்பவரென்று பாடப்பட்டது. '[illegible]' என்று அவர் ப்ரஹ்மஸ்வரூபி என்றுமங்கு கூறப்பட்டது. '[illegible]' என்றுமங்கே (கருடனிடமும் ஹரியிடமும் ஸமமான பக்திஸேவையைப்பெரியோர் பரவுவர் என்று) பாடியது. ஶப்தப்ரஹ்மாத்மராயும் பரப்ரஹ்மாத்மராயுமிருப்பவர். ஶப்தப்ரஹ்மத்திற்கும் பரப்ரஹ்மத்திற்கும் 'ப்ரஹ்மம்' என்ற திருநாமம் ஸமானம். '[illegible]' என்கிற 5-வது ச்லோகத்தில் 'விஷ்ணுவின் இரண்டாவது ஆகாரம்' என்று வர்ணநம். [illegible] '[illegible]' என்று பஞ்சாசத்து 6-வது ச்லோகம். ஸத்யர், ஸுபர்ணர் கருடர், தார்க்ஷ்யர், விஹங்கேச்வரர் என்ற ஐந்து வ்யூஹமூர்த்திகளும் பஞ்சப்ராணன்களுக்கும் தைவதங்கள். [illegible]-ஒருவரும் உமக்கு நிகரில்லை. [illegible]-விச்வரூபத்தை ஸேவிக்கையில் அர்ஜுநன் அந்தக்காட்சி ஸம்ப்ரமத்தில் '[illegible]' என்று பேசியது போலும், '[illegible]' என்றும் அங்கே அர்ஜுநன் பேசியபடியும் இங்கேயும் '[illegible]' '[illegible]' என்று பாடியது.

[illegible]-இது மூன்றாவது தண்டகம். ஒன்றும் நிவேதநம் செய்யக்கடவேனில்லை. இந்த நமஸ்காரத்தை நிவேதநம் செய்கிறேன். யாருக்கு? [illegible]-ஓயாமல் பூஜிக்கப்படுமவருக்கு. [illegible]-மாறி மாறி அடிக்கும் இறக்கைகளிலிருந்து வீசும் காற்றினால் மோதப்படும் ஸமுத்ர அலைகளால் அறையப்படும் ஶப்தங்களால் கிடுகிடுத்து ஸர்ப்பராஜர்கள் கோபித்துச் சீறுகையில் அவர்களை இந்த்ரனுடைய வஜ்ராயுதம்போல் துளைக்கும் நக வரிசையையுடையவர். நாகேந்த்ரர்களை ஹிம்ஸிப்பது இவருடைய வஜ்ரநகங்கள். இந்த்ரனுடைய வஜ்ராயுதம் இவருக்குத் தழும்போடு நிற்கும். '[illegible]' என்பது நீண்ட கையினால் அறைவது. இவர் கையாலறைவதில்லை. தூரத்தில் இவர் பறக்கையில் அதிலிருந்து கிளம்பிய வேகக்காற்று ஸமுத்ர அலைகள் மேலடித்து அந்த அலைகள் பாதாளத்தில் அறைகின்றன. அந்த அலைகள்தான் இவருடை சபேடை. [illegible]-இவர்

மூக்கு மிகக் கொடூரமானது. நகதந்தேஜஜ ஹ்ரஸ்வ–புருவங்கறிப்பு ஸர்ப்பநர்த்தகம் போலாகின்றது. உடஜூயா வஜ்ரிணே–வஜ்ரா யுதம்போன்ற பற்களிருப்பதால் இவரை வஜ்ரதாரென்று சொல்லலாம். தஸ்மை(நம:)– உமக்கு இந்த நமஸ்காரம். தஸ்யாம் ஸுபர்ணவித்யா–என்று ஒட்டினுல் ஸங்கர்ஷணரான கருடஸம்பந்தியான பரப்ரஹ்மவித்யை என்று பொருள். பஞ்சாசத்தின் இரண்டாவது ச்லோகத்தின் கடையடி 'ஹ்ரீவீஸா ஐஷு வித்யா வஸிவிதமஹநாவாதா மாநஸேதீ ந:' என்று இருப்பதை நினைக்கவேணும். விதேயா–அந்த வித்யை எங்களுக்கு விதேயமாகும்படி (வசப்படும்படி) விதேயா– செய்யப்படவேணும். ஸமவஹாஸ்யாவாஜயெ மா:–பகவத்தாஸ்யத்தை என்னை அடைவிக்க வேணும். 'வதபோநிஷ்டிதெ ஷயிநூநெ ஸஸ்யாம் வெஷ கிங்கரா:' 'தேஹஸம்பந்தத்தை முன்னிட்டு வரும் வர்ணாச்ரமதர்மங்களெல் லாம் எங்களைக் கட்டுப்படுத்தாது. எனெனில் தேஹஸம்பந்தமே பொய். நாங்களே ப்ரஹ்ம மெனும் ஜ்ஞாநம் பிறந்துவிட்டது. தத்வ ஜ்ஞாநாக்நியால் தேஹத்தை முன்னிட்ட ஜாதி ஆச்ரம ஸம்பந்தமான ஸகல கர்மாதிகாரங் களும் கொளுத்தப்பட்டுவிட்டன. ச்ருதியின் தலையின்மேல் (உபநிஷத்தில்) நாங்களிருக் கிறோம். வேதத்திற்கு நாங்கள் கிங்கரராக மாட்டோம்' என்று ஜ்ஞாநம் பிறந்த பிறகு வேததாஸ்யமில்லை. வேதாஜ்ஞைக்குக் கட்டுப் படவில்லை' யென்பர். நாங்கள் உம் ஸ்வரூப மான வேதத்திற்கு தாஸ்யத்தையே கோரு கிறோம். பகவானுக்கு தாஸ்யத்தையும் கோரு கிறோம். 'ஸமவஹாஸ்யம்' என்றும் பாடம். ஒவ்வோர் வ்யாக்யாநத்தில் ஒவ்வோர் பாடம். ஜபெமாஸு ஜெ–முன்பு பகவானுடைய தயை யை ப்ரார்த்தித்தார். இங்கே கருடாழ்வார் தயையைப் ப்ரார்த்திக்கிறர். இவர் தயையைப் ப்ரார்த்தித்துவிட்டு மேலே இவர் மந்த்ரத்தை ப்ரஸ்தாபிக்கப்போகிறர். அதற்குமுன் இவர் தயப்ப்ரார்த்தனை.

ஊநாபநாமதவகக்ஷிவகஸ்மாநதாரக ஸ்வாவகஸ்ரீ தூஹாநாவி யாமெஸவாரஸ்யாயதாம் ந: –இது நான்காவது தண்டகம். ஊநா: தாவ க: ஸ்ஸாயதாம் ந:–உம்முடைய மந்த்ரம் எங் களை ரக்ஷிக்கவேணும். 'ஸாஸம் ஸாயதே' என்ற மந்த்ரஶப்தவ்யுத்பத்தியை ஸூசிக் கிறர். ஊநாமதவகக்ஷிவக ஸ்மாநதாரக: – ஊநாமதவகக்ஷி–பின்னாலே 'பக்ஷி' என்னும் பதத்தையும், வகஸ்மாநதாரக:–முதலில் (தலை யில்) தாரகமெனும் ப்ரணவத்தையுமுடைய தும், விதூஹாநாவி யாமெஸவா:–சித்ரபானு வெனும் அக்நியின் ப்ரியபத்நியாகிய 'ஸ்வாஹா' என்பதை கடைசிப் பதமாயுடையதாயுமுள் ளது. மந்த்ரம் மறைவாகக் கூறப்படுகிறது. 'வக்ஷிவ ந்த ஸ்வவக்ஷிவி தயஊவவாடி ஹு ஸ்வாடொஜாரதாரம் ஊஷ ம் மாநஸேதம் தம் ஹாநதவஹஜயிதாமெஸவாரம் ஸ்ரீ ஜயா ஊ:' என்றுபஞ்சாசத்து. நடுவிலிருப்பது 'பக்ஷி' என்றும் 'க்ஷிவ' என்றும் இரண்டு ப்ரகாரங் களுமங்கே ஸாதிக்கப்பட்டது. த்ரிவமஹாவ வமஷ்வஸ்ஸித்தி: (ந ஸ்யாயதாம்)–தர்மார்த்த காமங்களான த்ரிவர்க்கங்களையும், மூன்று வர்க்கங்களிலும் சேராத ஸர்வவிலக்ஷணமான 'வாவ: வரம்' என்று சொல்லும் மோக்ஷப்ரஹ் மாநந்தத்தையும் தரும் மந்த்ரம். மேலே 'ஹோநநுஷொஜீ ' என்று முடிவிலும் கூறப் படுகிறது. வரவெஸாமயாகெ–ஸ்ரீவைகுண்ட மெனும் பரமாகாசம் உமக்கு நித்யவாஸக்ரு ஹம். வஜ்ரஜெஷிஜவஷ்ஜஊஷவிஸ்ஷூதி ஜூாவதீணஷ்–இந்த்ரன்பலனென்னு மஸுரனைக் கொன்றேமென்று கர்வம் மண்டி எரிவதால் ஜ்வலிப்பவன். அப்படி கர்வம் மண்டி எரிகை யில் வாலகில்யர்களெனும் அங்குஷ்டபரிமாண ரான ரிஷிகளைப் பார்த்துச் சிரித்தான். உனக்கு மேற்பட்ட பலமுடையவர் வந்து உன்னை அடக்கி பரிஹஸிப்பார்' என்று அந்த ரிஷிகள் ப்ரதிஜ்ஞை(ஶபதம்) செய்தார் கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

(பெரிய திருமொழி)

"அங்கண் ஞாலமஞ்ச"

[பெரிய திருமொழி- முதற்பத்து- ஏழாந்திருமொழி.]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

1 அங்கண்ஞால மஞ்ச வங்கோ ராளரியா யவுணன்
பொங்கவாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்
பைங்கணானைக் கொம்புகொண்டு பத்திமையா லடிக்கீழ்ச்
செங்கணாளி யிட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றமே.

அவதாரிகை:-கீழே 'வாணிலாமுறுவ'லில் ஆழ்வார் அநந்யோபாயத்வத்தை முன்னிட்டுத் தமது பூர்வவ்ருத்தங்களை அநுஸந்திப்பதன் மூலம் ஒரு கால்போல் ஒன்பதின் காலும் 'திருவடியடைந்தேன்', 'திருவடி யடைந்தேன்' என்று ஸ்ரீ பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக் கொண்டு ஸ்ரீநைமிசாரணிய ஸ்வாமி திருவடிகளில் ஶரணம் புகுந்தார். இதைக் கண்ட எம்பெருமான் இவரது அத்யவஸாயத்தின் அளவை ஸஹிக்கமாட்டாமல், ஒரு சிறுக்கனான ப்ரஹ்லாதனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்தில் ப்ரதிஜ்ஞை பண்ணின இடத்திலே ஸந்நிதிபண்ணி, பிற்பட்ட காலத்தில் உள்ளாரும் தன்னை இழக்கவேண்டாதபடி, எல்லார்க்கும் ஒக்க ஸேவை ஸாதிக்கின்ற சிங்கவேள்குன்றத்தில் தன் இருப்பைக் காட்ட, 'அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரந்தோளன்' என்று ஸ்ரீ லக்ஷ்மீவிஶிஷ்டனான அத் திவ்யமங்களவிக்ரஹத்தைக் கண்டு மங்களாஶாஸநம் பண்ணி அநுபவிக்கிறார்.

[பதவுரை] அம் கண்-அழகிய இடமகன்ற, ஞாலம் அஞ்ச-நிலவுலகத்திலுள்ளார் யாவரும்பயப்படும்படி, அங்கு-(ஹிரண்யன் காட்டின) அவ்விடத்தில், ஓர் ஆள் அரியாய்-ஒப்பற்ற ந்ருஸிம்ஹமூர்த்தியாய்(த் தோன்ற, அதைக் கண்டு), அவுணன்-ஹிரண்யாஸுரன், பொங்க-(கோபம் பொங்கி) மேலிட, ஆகம்-(அவனது)உடலை, வள் உகிரால்-கூர்மையான நகங்களால், போழ்ந்த-பிளந்திட்ட, புனிதன்-பரிசுத்தமூர்த்தியான எம்பெருமான், இடம்-(எழுந்தருளியிருக்கும்) இடம் யாதெனில்:-செங்கண் ஆளி-(சீற்றத்தால்) சிவந்த கண்களையுடைய ஸிம்ஹங்கள், பைங்கண்-பசுமையான கண்களையுடைய, ஆனை கொம்புகொண்டு-யானைகளின் தந்தங்களைப் பறித்துக்கொண்டு, பத்திமையால்-(ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடம் கொண்டுள்ள மிகுந்த) பக்தியினாலே, அடி கீழ் இட்டு-(அவனுடைய) திருவடிகளிலே ஸமர்ப்பித்து, இறைஞ்சும்-வணங்குகின்ற, சிங்கவேள்குன்றமே-சிங்கவேள்குன்றமென்னும் திருப்பதியாம்.

[தெளிவுரை] இடமகன்ற நிலவுலகத்தார் யாவரும் அஞ்சும்படி, ஹிரண்யன் காட்டின தூணில், தாநவஶிசுவான ப்ரஹ்லாதன் வார்த்தையைப் பரிபாலிப்பதற்காக அத்விதீயமான ந்ருஸிம்ஹரூபியாய்த் திருவவதரிக்க, அம்மூர்த்தியைக்கண்டு கோபாவேஶங்கொண்ட ஹிரண்யாஸுரனது உடலைத் தனது நகங்களால் நார் கிழிப்பாரதுபோல நன்றாகக் கிழித்திட்ட பரிசுத்தமூர்த்தியான எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற இடம் எதுவெனில்:—சிவந்த கண்களையுடைய ஸிம்ஹங்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடம் கொண்டுள்ள அத்யந்த பக்தி

னால் யானைத்தந்தங்களைப் பறித்துக் கொணர்ந்து காணிக்கையாக ஸமர்ப்பித்து அவன் திருவடிகளில் வணங்குகின்ற சிங்கவேள்குன்றமாகும்.

[குறிப்பு] சிங்கவேள்குன்றம் என்னும் இத்திவ்யதேசம் வடநாட்டுத்திருப்பதிகளுள் ஒன்று. சிங்கவேள் குன்றம் என்னும் சொல்தொடர், "யாவராலும் விரும்பப்படும் கட்டழகுவாய்ந்த ஸ்ரீ ந்ருஸிம்ஹன் (அழகிய சிங்கன்) எழுந்தருளியிருக்கும் மலை" என்று பொருள்படும். இது சிங்கவேழ் குன்றம் எனவும் படும். இதுவே *ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம் என்று சொல்லப்படுவது. இத்தலம், சிங்கம் புலி யானை முதலிய கொடிய விலங்குகள் வாழும் மஹாரண்யத்துள் அமைந்துள்ளதென்பதும், வநசரர்களான வில்லுடை வேடர்களால் ஸஞ்சரிக்கப்பட்டுப் பயங்கரமான ப்ரதேசமாயுள்ளதென்பதும் இப்பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத்தின் ஈற்றிரண்டடிகளால் விளங்கும்.

அங்கண் ஞாலமஞ்ச-ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் ஜகத்ரக்ஷணத்துக்காகத்தான் என்றாலும், ஆச்ரிதவிரோதியைப் போக்குவதற்காக அவன் கொண்ட சீற்றம் தாளாமல் ஞாலமெல்லாமஞ்சிற்றென்க.

ஓர் ஆளரி-இதற்கு முன்பு ஓரிடத்திலும் ஒருபோழ்தும் காணப்படாத அத்விதீயமான நரஸிம்ஹம்.

பைங்கண் ஆனைக்கொம்பு....சிங்கவேள் குன்றம்-ஸிம்ஹங்கள் தமது சீற்ற மிகுதியால் யானைகளைக் கொன்று, அவற்றின் தந்தங்களை மிகுந்த பக்தியுடன் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திருவடிகளில் காணிக்கைபோல் ஸமர்ப்பித்து வணங்குமென்க. ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய ஸாந்நித்ய விசேஷத்தால் அங்குள்ள ஸிம்ஹம் முதலிய கொடிய ம்ருகங்களும் அவனிடம் பக்திமிக்குள்ளனவென்பது 'பத்திமையால் இறைஞ்சும்' என்பதால் விளங்கும்.

செங்கண் ஆளி-தங்களுக்கு ப்ரதிகூலமான ம்ருகங்களை அழித்து வெற்றிகொண்டு, அந்த வீரஸ்ரீயாலே சிவந்த கண்களையுடைய ஸிம்ஹங்கள் என்றபடி.

வள்ளுகிர்-வண்மை உகிர்; பைங்கண்-பசுமை-கண்; செங்கண்-செம்மை-கண்.

2 அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாயவுணன்
கொலைக்கையாளன் நெஞ்சிடந்த கூருகிராளனிடம்
மலைத்தசெல்சாத் தெறிந்தபூசல் வன்துடிவாய் கடுப்ப
சிலைக்கை வேடர் தெழிப்பறாத சிங்கவேள் குன்றமே.

[பதவுரை] அலைத்த-(சீற்றத்தாலே நாவை) ஆட்டுகின்ற, பேழ்வாய்-பிளவுபட்ட வாயையும், வாள் எயிறு-ஒளி பொருந்திய பற்களையும், ஓர் கோள் அரியாய்-ஒப்பற்றமிடுக்கையுமுடைய ஸிம்ஹமாய், கொலை-கொலைத்தொழிலையே இயற்கையாகக்கொண்ட, கையா

*[இந்த திவ்யதேசத்தில் ஆழ்வார் மங்களாசாஸநம் பெற்றுள்ள ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே, ஸ்ரீ அஹோபிலமட ஆஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தர்களான ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் முதல் இதாநீம் ஸ்ரீ அழகியசிங்கர்கள் வரையிலுள்ள ஆசார்யஸார்வபௌமர்களால் ஆராதிக்கப்பட்டுவருகிறார். இந்த எம்பெருமான் விஷயமான இப்ப்ரபந்தம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவோலக்கத்தில்தினம் அநுஸந்திக்கப்பட்டுவருகிறது.]

ளன் அவுணன்-கையையுடையனான ஹிரண்யாஸுரனுடைய, நெஞ்சு இடந்த-மார்பைக் கிழித்திட்ட, கூர் உகிராளன்-கூர்மையான நகங்களையுடைய எம்பெருமான், இடம்-(எழுந்தருளியிருக்கும்) இடம் யாதெனில்:-மலைத்த-வேடர்களால் தகையப்பட்ட, செல் சாத்து-(யாத்ரையாகச்)செல்லும் கூட்டத்தினரோடு, எறிந்த பூசல்-எதிர்த்துச்செய்த சண்டையில், வல்வாய் துடி-வலிய (தோல்) வாயையுடைய உடுக்கைகள், கடிப்ப-ஒலிக்கவும், சிலைக்கை வேடர்-வில்லைக் கையிலேந்திய வேடர்களுடைய, தெழிப்பு அறாத-ஆரவாரம்நீங்காத, சிங்க வேள் குன்றமே.

[தெளிவுரை] மிக்க சீற்றத்தால் நாவை ஆட்டிக்கொண்டுள்ள, பெரிய வாயையும் ஒள்ளிய பற்களையும் மிகுந்த மிடுக்கையுமுடைய நரஸிம்ஹமாய் அவதரித்து, கொலைத்தொழிலையே இயற்கையாகக்கொண்டுள்ள ஹிரண்யாஸுரனுடைய மார்பைத் திருவுகிர்களினால் கிழித்தருளின எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஸ்தாநம் எதுவெனில்:-காட்டுவழியில் திரளாகச்செல்லும் கூட்டத்தினரை வழிப்பறிசெய்து அவர்களோடு எதிர்த்துச்செய்யும் சண்டையில், உடுக்கை ஓசையும் வேடரது வீர ஆரவாரமும் அநவரதம் ஒலிக்கின்ற சிங்கவேள்குன்றமாம்.

அவுணன் கொலைக்கையாளன்-"பரஹிம்ஸை பண்ணுவதே ஸ்வபாவமாய், அது செய்வதற்கே தேவதைகள் பக்கல்வரம்பெற்று அதுதானே யாத்ரையாய்த்திரியுமவன்".

சாத்து-ஸமூஹம்; கூட்டம். *ஸார்த்த: என்னும் வடமொழியின் விகாரம்.

பூசல்-சண்டை,

3 ஏய்ந்தபேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியா யவுணன்
வாய்ந்தவாகம் வள்ளுகிரால் வகிர்ந்தவம் மானதிடம்
ஓய்ந்தமாவு முடைந்தகுன்று மன்றியும் நின்றழலால்
தேய்ந்தவேயு மல்லதில்லாச் சிங்கவேள் குன்றமே.

[பதவுரை] ஏய்ந்த (திருவுருவுக்குப்) பொருந்திய, பேழ்வாய்-பெரிய வாயையும், வாள் எயிறு-ஒளி பொருந்திய பற்களையும், ஓர் கோள் அரியாய்-ஒப்பற்ற மிடுக்கையுமுடைய நரஸிம்ஹமாய், அவுணன்-ஹிரண்யாஸுரனுடைய, வாய்ந்த ஆகம்-பெரியதாய் வளர்ந்துள்ள உடலை, வள் உகிரால்-(தனது)கூரிய நகங்களால், வகிர்ந்த-(அவலீலையாகக்)கிழித்திட்ட, அம்மானது இடம்-ஸர்வஸ்வாமியானவன் எழுந்தருளியிருக்கும் இடம் யாதெனில்:-ஓய்ந்த மாவும்-(பாலைநிலத்தில் திரிந்து சால) ஓய்ந்த ம்ருகங்களும், உடைந்த குன்றும்-(தீக்கிளம்புதலால்) பிளவுபட்ட சிறு மலைகளும், அன்றி-(இவைகளே)யன்றி, அழலால் நின்று தேய்ந்த-தீப்பிடித்துக் குறைக்கொள்ளிகளாய்க் குறைந்துபோயுள்ள, வேயும்-மூங்கிலும், அல்லது இல்லா-இவையன்றி வேறொன்றும் காணப்படாத, சிங்கவேள்குன்றம்.

[தெளிவுரை] திருவுருவத்துக்குத் தகுந்த பெரிய வாயையும், ஒளிபொருந்திய பற்களையுமுடைய மிடுக்குள்ள நரஸிம்ஹமாய்த் திருவவதரித்து, ஹிரண்யாஸுரனுடைய பேருடலைக் கூரிய திருவுகிர்களால் அவலீலையாகக் கிழித்திட்ட ஸர்வஸ்வாமியான ஸ்ரீநரஸிம்ஹமூர்த்தி எழுந்தருளியிருக்குமிடம் யாதெனில்:-வன விலங்குகளும், தீயினால் வெடித்துள்ள மலைகளும், ஒன்றோடொன்று உராய்தலினால் தீப்பிடித்தெரிந்த மூங்கிற் குறைகளும், ஆகிய இவைகளைத் தவிர வேறொன்றும் காணப்படாத சிங்கவேள்குன்றமாம்.

4 எவ்வம்வெவ்வேல் பொன்பெயரோ னேதல னின்னுயிரை
வவ்வியாகம் வள்ளுகிரால் வகிர்ந்தவம் மானதிடம்
கவ்வுநாயும் கழுகுமுச்சிப் போதொடு கால்சுழன்று
தெய்வமல்லால் செல்லவொண்ணுச் சிங்கவேள் குன்றமே.

[பதவுரை] எவ்வம்-துன்பத்தைக் கொடுக்கக்கூடிய, வெவ்வேல்-கொடிய வேலாயுதத்தையுடைய, பொன் பெயரோன் இன் உயிரை-ஹிரண்யாஸுரனுடைய இனிய உயிரை, வவ்வி-பறித்து, ஆகம்-(அவனது) உடலை, வள் உகிரால் வகிர்ந்த-கூர்மையான நகங்களால் கிழித்தருளின, அம்மானது இடம்-ஸர்வஸ்வாமியான எம்பெருமான் (எழுந்தருளியிருக்கும்) இடம் யாதெனில்:-கவ்வும் நாயும்-(கண்டாரைத் தனதுவாயினுற்) கவ்வும் தன்மையுள்ள நாய்களும், கழுகும்-கழுகுகளும், உச்சிப்போதொடு-(எப்போதுமே ஒருபடியாகக் காய்கின்ற) ஸூர்யவெப்பத்தால், கால் சுழன்று-கால் தடுமாறுவதாய், தெய்வம் அல்லால்-தேவதைகள் அல்லாமல், செல்ல ஒண்ணு-(வேறொருவர்) செல்ல முடியாத, சிங்கவேள்குன்றம்.

[தெளிவுரை] துன்பத்தைத் தருகின்ற கொடிய வேலாயுதத்தையுடைய சத்துருவான ஹிரண்யாஸுரனது இனிய உயிரை வாங்கி, அவன் உடலைக் கூரிய நகங்களால் கிழித்தருளின ஸர்வேச்வரன் எழுந்தருளியிருக்கும் இடம் யாதெனில்:-கவ்விக் கடிக்கும் தன்மையுள்ள நாய்களும் கழுகுகளும் அத்யுக்ரமான ஸூர்யவெப்பத்தினுல் கால்தடுமாறப்பெற்றதாய், தேவதைகள் தவிர மற்றையோர் செல்லவொண்ணுத சிங்கவேள்குன்றமாம்.

எவ்வம்-துன்பம்; எவ்வும் என்றும் பாடம். வெவ்வேல்-வெம்மை-வேல். பொன்பெயரோன்-ஹிரண்யன். ஏதலன்-பகைவன்; இச் சொல் ஏதிலன் என்றும் வழங்கும். இன்னுயிர்-இனிமை-உயிர். அவனுக்கு ப்ரியமான உயிர்.

உச்சிப்போதொடு கால் சுழன்று-உஷ்ண கிரணனை ஸூர்யன்கூட அந்நிலத்தில் தோன்றினுல் கால் தடுமாறுவான் என்று அந்த இடத்தின் வெம்மை மிகுதியைக் கூறியபடி. உச்சிப்போது-உச்சிப்போதைச் செய்பவன்-ஸூர்யன். போதொடு-என்பதில் 'ஒடு' என்னும் மூன்ரும் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருளால், ஸூர்யனும், கவ்வும் நாயும், கழுகும்-இவை மூன்றும் ஒரு சேரக் கால்சுழல்வன வென்க.

கால் சுழன்று-கால் என்பதற்குக் காற்று என்று பொருள் கொண்டு, 'காற்றுச்சுழல் எடுத்து' என்றும் பொருள் கூறலாம்.

தெய்வமல்லால் செல்லவொண்ணு-ஹிரண்யன்போன்ற அநாச்ரிதர்கள் சென்று ப்ரவேசிக்கமுடியாத ப்ரதேசமென்பதும் 'விஷ்ணோர்ஹ்ருதி வஹ்நி ஜ்வாலா' என்கிறபடியே பகவத்பக்தியுள்ளவர்கள் செல்லும் ப்ரதேசமென்பதும், 'ஸீதோபவ ஹநூமத:' என்று பிராட்டி திருவருளால் திருவடிக்குத் தீக் குளிர்ந்ததுபோல். அந்நிலத்து வெம்மை தெய்வத் தன்மைவாய்ந்த ஆழ்வார் போன்ற ஆச்ரிதர்க்குக் குளிர்ச்சியைக் கொடுக்குமென்பதும் வ்யாக்யாதாவின் திருவுள்ளம்.

5 மென்றபேழ்வாய் வாளெயிற்ருேர் கோளரியா யவுணன்
பொன்றவாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்
நின்றசெந்தீ மொண்டுசூறை நீள்விசும்பூ டிரிய
சென்றுகாண்டற் கரியகோயில் சிங்கவேள் குன்றமே.

(தொடரும்)

ஸ்ரீ:

சென்று காண்டற்கரிய கோயில்

திருமங்கையாழ்வார் அநேக திருப்பதிகளைப்பற்றியும் அத்திருப்பதிகளிலுள்ள எம்பெருமான்களைப்பற்றியும் அநேக பாடல்கள் பாடியுள்ளார். ஸ்ரீ அஹோபிலம் என்னும் திருப்பதியைப்பற்றி அவர் பாடிய பாக்கள் பத்துதான். அந்த பத்துப்பாக்களில் ஸ்வாபாவிகமான அந்தத்திருப்பதியின் மாஹாத்ம்யம் எவ்வளவு நன்கு விளக்கப்பட்டுள்ளது என்பது ஸமீபத்தில் நடந்த ப்ரஹ்மோத்ஸவத்தின் போது அங்கு சென்று அநுபவிக்கும்படியான பாக்யம்பெற்ற அடியேனுடைய மனத்தில் தோன்றிற்று. அதை யதாமதி விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

மார்க்கம்

அஹோபிலக்ஷேத்ரமானது சென்னை ராஜ்யத்தில் கர்நூல் ஜில்லாவிலுள்ளது. மலையடிவாரத்தில் காடுகளுக்கு நடுவிலுள்ளது. சென்னைப்பக்கமிருந்து செல்வோர் கடப்பைவரை ரயில்மூலமாகவும், அங்கிருந்து ஆல்லகட்டா என்னுமிடம்வரை பஸ்ஸிலும் சென்று, பிறகு அங்கிருந்து 15-மைல்தூரம் வண்டியிலாவது நடந்தாவது செல்லவேண்டும். நல்ல ரோடு வசதி இருக்கிறது. கோயில்வாசல்வரை ரோடு செல்கிறது. வடக்குபாகத்திலிருந்து வருபவர்கள் நந்தியால்வரை ரயில்மூலமாகவும் அங்கிருந்து ஆல்லகட்டாவிற்கு பஸ்ஸிலும் வந்து வரலாம். உத்ஸவகாலங்களில் அஹோபிலத்திற்கே பஸ் விடப்படுகிறது. இந்த க்ஷேத்ரமானது புராணப்ரஸித்திபெற்றது.

க்ஷேத்ரமாஹாத்ம்யம்

‘அஹோபிலம் ந்ருஸிம்ஹஸ்ய ஸந்நிதே ராஜநந்தந । கயாப்ரயாககாசீப்ய: ஶதகுணாதிகம் ॥’

[அஹோபிலந்ருஸிம்ஹனைச் சுற்றிலும் மூன்றுயோஜனை விஸ்தீர்ணமுள்ள க்ஷேத்ரமானது கயா, ப்ரயாகை, காசி இவைகளைக்காட்டிலும் நூறுமடங்கு அதிகமான மேன்மையுடன் கூடியது. இது ஸத்யம்] என்றும்,

‘கயாம் பித்ருப்ரீதயே தநுத்யாகாய ஜாஹ்நவீம் । காஶீம் தாரோபதேஶாய ஸந்நிதிஸ் ஸ்ரீரஹோபிலே ॥’

[பித்ருக்களுக்கு ப்ரீத்யர்த்தமாக கயைக்குச் செல்லவேண்டும். தனது ஶரீரத்தை விடுவதற்கு கங்கைக்குச் செல்லவேண்டும். தன்னைக் காப்பாற்றும் மந்த்ரோபதேசத்திற்காகக்காசிக்குச் செல்லவேண்டும். இம்மூன்றுக்கும் சேர்ந்து ஸ்ரீ அஹோபிலத்திற்குப்போனால் போதுமானது] என்றும்,

‘காஶ்யாம் யுகஸஹஸ்ராணி ப்ரயாகே யுகவிம்ஶதி: । கயாம் யுகஶதஞ்சைவ வஸேத் திநமஹோபிலே ॥’

[காசியில் ஒருவன் ஆயிரம் யுகம் வஸிப்பதும், ப்ரயாகையில் இருபதுயுகம் வஸிப்பதும், கயையில் நூறுயுகம் வஸிப்பதும் ஸ்ரீ அஹோபிலத்தில் ஒருதினம் வஸிப்பதற்கு ஸமம்] என்றும்,

‘கயாயாமயுதம் தத்தம் ப்ரயாகே லக்ஷபோஜநம் । காஶ்யாஞ்சைவ த்விலக்ஷந்து க்ராஸ ஏகோ அஹோபிலே ॥’

[கயையில் பதினாயிரம் பேருக்கு அந்நதானம் செய்வதும், ப்ராயாகையில் லக்ஷம்பேருக்கு அந்நதானம் செய்வதும், காசியில் இரண்டு லக்ஷம் பேருக்கு அந்நதானம் செய்வதும் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தில் ஒருகபளம் அந்நதானம் செய்வதற்கு ஸமமாகும்] என்றும்,

‘அஹோபிலாவநௌ தத்தத்ரவ்யேணாண்வபி த்விஜா: । தத்த்ரவ்யம் மேருணா துல்யம் வர்த்ததே வடபீஜவத் ॥’

[அஹோபிலக்ஷேத்ரத்தில் தானம் செய்யப்பட்ட த்ரவ்யம் அணுவாகவிருந்தாலும் சிறிய ஆலம்விதையானது பெரிய மரமாவதுபோல் மேருபர்வதமளவு வ்ருத்தியாகிறது] என்றும்,

‘பஞ்சாநாமபி பாபாநாம் பஞ்சகோடியம் ஹாரஹேது: । ப்ராதஸ்ஸ்நாய வஸேத்வ்ருத்தே அஹோபிலே அஹோபிலே ॥’

[பஞ்சமஹாபாதகங்களையும் பஸ்மீகரிக்கும் ஶக்தியுள்ள இந்த அஹோபிலமென்கிற மஹா

மந்த்ரம் காலையில் எழுந்தவுடன் சொல்லத் தகுந்தது] என்றும்,

‘ஸுஹோஸியஜிதி ஹெ) சது தாஸக்ஷர உத்த
ழ ! வதாவடுமடுஹையாசாஸம வதாஸாநந
வ ஜீதழ’॥

[உத்தமமாயும், நான்கு எழுத்துக்களுடையதும், நான்குவித புருஷார்த்தங்களைக்கொடுக்கக்கூடியதாயும், ப்ரஹ்மாவினல் பூஜிக்கப்பட்டதாயும் இருக்கிறது இந்த அஹோபிலம் என்னும் மந்த்ரம்] என்றும் அஹோபிலமாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மற்றும், புராணங்களில் ஸ்ரீரங்கம் முதலிய க்ஷேத்ரங்களுடன் கூட ஸ்வயம்வ்யக்தமென்று பரிகணிக்கப்பட்டு உயர்ந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நவ ந்ருஸிம்ஹர்கள் திருக்கோயில்கொண்டிருக்கும் இத் திவ்யதேசத்தை ‘தெய்வமல்லால் செல்லவொண்ணுச் சிங்கவேள் குன்றமே’ என்றும்,

‘சென்று காண்டற்கரிய கோயில் சிங்கவேள் குன்றமே’ என்றும்,

‘நாத்தழும்ப நான்முகனுமீசனுமாய் முறையாலேத்த என்றும்,

‘நம்முடை நம்பெருமான்’ என்றும்

‘எங்களீசனெம்பிரான்’ என்றும் பலவாருகத் திருமங்கைமன்னன் பாடியுள்ளார்.

ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானத்தில் 34–வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளி இருந்த ஸ்ரீ ஶடகோபராமாநுஜயதீந்த்ர மஹாதேசிகன் (அத்திப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கர்) ‘ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து’ என்கிற ப்ரபந்தத்தினல் இத்திவ்யதேசத்து எம்பிரானை (மாலோலனை) மங்களாஶாஸநம் செய்திருக்கிருர்.

இந்த க்ஷேத்ரத்திற்குப் பக்கத்தில் ‘ருத்ரவரம்’ என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கு ருத்ரன் வஸித்து ஸ்ரீந்ருஸிம்ஹனைக்குறித்து ‘ஸ்ரீமந்த்ரராஜபதஸ்தோத்ர’ த்தைப் பண்ணி தபஸ்ஸு செய்து வரம் பெற்றதாயும் அதனுல் அவ்வூருக்கு ருத்ரவரமெனப் பெயர் வந்ததாயும் சொல்லுவர்கள். நந்திதேவர் ருத்ரனைக்குறித்துத் தவம்செய்தவிடத்திற்கு ‘நந்தியால்’ என்றும் பெயரேற்பட்டது. இந்த நகரமும் அஹோபிலத்திற்குப்பக்கத்திலிருக்கிறது. இந்த வ்ருத்தாந்தம் புராணத்திலுள்ளது.

இங்கு சிவபக்தனுன ‘ப்ரதாபருத்ரன்’ என்னும் ராஜா யாத்திரையாக வந்தானும். அவன் தினந்தோறும் ஸ்வர்ணத்தால் உமா மஹேச்வர ப்ரதிமை செய்து அதைப்பூஜித்து ஒருவருக்கு தாநம் செய்தபிறகு சாப்பிடுவது வழக்கமாம். இங்கு வந்தபோது ஸ்தபதியிடம் ஒரு உமாமஹேச்வரபிம்பத்தை வார்க்கச்சொல்ல, எத்தனை தடவை வார்த்தபோதிலும் அது லக்ஷ்மீந்ருஸிம்ஹனுகவேமாறிவிட்டதாம். இதை அந்த ஸ்தபதி ராஜாவிடம் சொல்ல, ராஜாவும் தன்னெதிரில் வார்க்கும்படிசொல்லி பார்த்துக்கொண்டிருந்தானும். அப்போதும் லக்ஷ்மீந்ருஸிம்ஹனுகவே மாறிற்றும். இதைக் கண்ணுற்ற வாசன் அப்போது அங்கு எழுந்தருளியிருந்த பெரியோர்களிடம் இந்த விஷயத்தை விஜ்ஞாபிக்க, அவர்களும் ‘இது இந்த க்ஷேத்ரமாஹாத்ம்யம். இது ந்ருஸிம்ஹக்ஷேத்ரமாகையால் தேவதாந்தரங்களுக்கு அவகாசமே கிடையாது’ என்றுரைத்தனராம். அன்று முதல் வீரசைவனுயிருந்த ப்ரதாபருத்ரனும் ந்ருஸிம்ஹனின் மஹிமையையறிந்து வைஷ்ணவனுகி, அந்த ஸ்வர்ணந்ருஸிம்ஹனை ஆராதநத்திற்கு எழுந்தருளப்பண்ணிவிட்டு ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படிக்கு அநேககைங்கர்யங்கள் செய்துள்ளதாகச் சரித்திரங்களுள்ளன. இதற்கநுகுணமாக இக்கோயிலில் அநேக சிலாஶாஸநங்களும் இருக்கின்றன.

விஜயநகரத்து ராஜாக்களான முகுந்ததேவராயன் முதலியவர்களுக்குப் பெருமாள் ஸ்வப்நம்ஸாதித்து ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனை ஆச்ரயிக்கும்படியும், வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுக்கும்படியும் நியமித்ததாகவும் ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பராக்ரந்தங்களில் ப்ரஸித்தியுள்ளது.

‘ஸ்ரீவாஸஸ்ரீந்ருஸிம்ஹௌ கலிகலுஷயிநாம் உத்தரே ஹேதுபூதௌ’ என்பதனுல் ஸ்ரீநிவாஸனும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனும் கலியினுல் தோஷமுள்ளவர்களுக்கு மோக்ஷகாரணபூதர்கள் என்றும் ப்ரஸித்தியுள்ளது. இன்

னும் இந்த க்ஷேத்ரமாஹாத்ம்யம் தெலுங்கு பாஷையில் அத்தேசத்து மக்களால் அநேக ஐதிஹ்யங்களுடன் கத்யபத்யமூலமாகச் சொல்லப்படுகிறது.

கலியன் ‘அங்கண்ஞாலமஞ்ச’ என்று தொடங்கும் பத்துப்பாட்டுக்களாலே இத்திருப்பதியை மங்களாசாஸநம் செய்துள்ளார். ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் ‘சிங்கவேள்குன்றமே’ என்று மலையையே பாடியிருக்கிறார். இங்கு ஒன்பது ந்ருஸிம்ஹர்கள் தனித்தனியாக மலைமுழுவதும் எழுந்தருளியிருப்பதால் ஒவ்வோரிடமும் தனித்தனியே பாடப்பெறாமல் மலையே பாடப்பெற்றது என்பதாக ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிப்பதுண்டு.

‘ஜ்வாலாஹோபிலமாலோலக்ரோடகாரஞ்ஜபார்க்கவா: । யோகாநந்தஶ்சத்ரவட: பாவநோ நவமூர்த்தய:’ என்பதாக ஒன்பது ந்ருஸிம்ஹமூர்த்திகள் இங்குள்ளனர். வேறு எந்த க்ஷேத்ரத்திலும் இந்த நவ ந்ருஸிம்ஹர்களை ஸேவிக்கமுடியாது. இவர்களில் கீழ் அஹோபிலத்தில், 1. பார்க்கவ, 2. சத்ரவட, 3. யோகாநந்தர்களையும், மேல் அஹோபிலத்திற்குச்செல்லும் வழியில் 4. காரஞ்ஜந்ருஸிம்ஹனையும், மேலே 5. அஹோபில, 6. க்ரோட, 7. மாலோல, 8. ஜ்வாலா, 9. பாவநந்ருஸிம்ஹர்களையும் ஸேவிக்கவேண்டும். ஒவ்வொரு ஸந்நிதியும் தனித்தனியாகவேறுபட்ட இடத்திலுள்ளது. இத்தலத்திற்கு ஸ்ரீபாஷ்யகாரர் எழுந்தருளி மங்களாசாஸநம்பண்ணியுள்ளார். ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் முதலான பூர்வாசார்யர்களாலும் மங்களாசாஸநம் பண்ணப்பட்டும், நம் ஸ்ரீ அஹோபிலமடத்து திவ்யாஸ்தாநபரம்பரையில் முதல்வரான ஸ்ரீ ஆதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனால் அநேகவருஷங்கள் ஆராதிக்கப்பட்டும் வந்துள்ளார் இத்திவ்யதேசத்தெம்பெருமான். இந்த க்ஷேத்ரமானது ஒரு பெரிய மலைத்தொடரின் மத்தியில் உள்ளது. ஒரு பாகம் வ்ருஷபாத்ரியெனப்படும் திருமலையாகவும் மறுபாகம் ஸ்ரீசைலமென்கிற பர்வதமாகவும் இருக்கிறது. இந்த மலைத்தொடரில் ‘கருடாத்ரி’ என்றும் ‘வேதாத்ரி’ யென்றும் பெயர்களுள்ள வெவ்வேறு மலைகள் உள்ளன. கருடாத்ரி யெனப்பெயர் வழங்குவதற்குக் காரணம் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது:– கச்யபப்ரஜாபதியின் புத்ரனான கருடன் தனது பிதாவின் நியமநத்தால் இந்த மலையில் உக்ரமாகத் தபஸ் செய்து, தேவதைகள் எவ்வளவு இடையூறு செய்தும் பலிக்காமல், முடிவில் தபஸ்ஸினால் ப்ரீதனான பகவான் ப்ரத்யக்ஷமாகி ‘உனக்கு வேண்டும் வரங்கேள்’ என்று சொல்ல, கருடனும், 1. அடியேனை தேவரீருக்கு வாஹநமாகக் கொள்ளவேண்டும்; 2. இந்த மலைக்கு அடியேனுடைய பெயரை வைக்கவேண்டும் என்றும் வரங்கேட்க, பகவானும் அதை அங்கீகரித்தார். அதுமுதல் பகவானுக்கு கருடன் வாஹநமாயும் இம்மலைக்கு கருடாசலமென்ற பெயரும் வழங்கப்படுகிறது.

‘வேதாத்ரி’ என்பதற்கும் அங்கு காரணம் கூறப்பட்டுள்ளது. ஸோமகன் என்னும் ராக்ஷஸன் வேதாபஹாரம் செய்ய, ப்ரஹ்மா பகவானைக்குறித்து தவம் செய்து அவரிடம் விண்ணப்பம் செய்ய, பகவானும் அந்த ராக்ஷஸனை வதம்செய்து வேதங்களை மீட்டுக்கொடுத்தார். வேதங்கள் தங்களுக்கு அடிக்கடி ராக்ஷஸர்களினாலேற்படும் இம்மாதிரியான ஆபத்துக்கள் நீங்க பகவானைக்குறித்து இந்த மலையில் தவம் செய்து ஸித்திபெற்றமையால் இதற்கு வேதாசலமெனப் பெயர் வந்தது.

ஹிரண்யகசிபுவை வதம் செய்தபோது பகவானுடைய பராக்ரமத்தைக்கண்டு தேவதைகளனைவரும் ‘அஹோ! பலம், அஹோ! பலம்’ என்று புகழ, பகவானும் தனது பலத்தைப் புகழ்ந்த இடத்திற்கு அஹோபிலம் என்னும் பெயர் இருக்கவேண்டும் என்று அருளிச்செய்தார்; அதனால் அஹோபிலமெனப்படுகிறது.

கீழ் அஹோபிலம்

1. ப்ரஹ்லாதவரதன்.

இங்கு எழுந்தருளியுள்ளவர் லக்ஷ்மீந்ருஸிம்ஹன். உத்ஸவமூர்த்திக்கு ப்ரஹ்லாதவரதன் என்று திருநாமம். தாயாருக்கு அம்ருதவல்லி என்று திருநாமம். ப்ரஹ்லாதாழ்வானை ஸர்வவிதமான ஆபத்துக்களிலிருந்தும் ரக்ஷித்து வரங்கொடுத்ததால் ப்ரஹ்லாதவரதனென்றும்

மலையினின்றும் பூமியில் உருட்டியபோது அம்ருதவல்லியே பூமிவடிவாயிருந்து தாங்கி ரக்ஷித்ததாயும் ப்ரஸித்தியுள்ளது. இவ்விடத்தில்ப்ரார்த்தனைகள் அதிகமாகச் செலுத்தப்படுகின்றன. இந்த மூர்த்தி நவந்ருஸிம்ஹர்களைக் காட்டிலும் வேறுபட்டவர். கீழ் அஹோபிலம் ஸந்நிதி அமைப்பு மிக நேர்த்தியாக அமைந்துள்ளது. இங்கு மூலவர் ந்ருஸிம்ஹரூபத்துடன் எழுந்தருளியிருக்கிறார். சிரஸ்ஸில் ஆதிசேஷன் குடையாக இருக்கிறார். பிராட்டியை இடது கையால் ஆலிங்கனம் செய்துகொண்டு மிகவும் சாந்தமாக எழுந்தருளியுள்ளார். ப்ரபையில் திருமாலின் தசாவதாரங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன. திருக்கைகளில் திருவாழி திருச்சங்குகளும் அபயஹஸ்தமும் உள்ளன. கிழக்கே திருமுகமண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம். உத்ஸவமூர்த்தி ந்ருஸிம்ஹரூபியாக இல்லை; உபயநாச்சிமாருடன் எழுந்தருயுள்ளார். சங்கசக்ரங்களை சாய்த்து தரித்துக் கொண்டிருக்கிறார். நின்ற திருக்கோலம். மற்றும், இங்கு பார்க்கவந்ருஸிம்ஹனது உத்ஸவரும், கண்ணன், ஆண்டாள், இவர்களது உத்ஸவமூர்த்திகளும், திருவடிவாரத்தில் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனும் எழுந்தருளியிருக்கின்றனர். இடதுபாகத்தில் விஷ்வக்ஸேநர் ஸந்நிதியில் விஷ்வக்ஸேநர், சக்கரத்தாழ்வான், கலியன் முதலானோர்களும் எழுந்தருளியுள்ளனர்.

நூற்றுக்கால் மண்டபம்

இங்கு மூன்று ப்ராகாரங்களுள்ள தேவாலயம் அமைந்திருக்கிறது. இந்த ஆலயம் விஜயநகரத்து ராஜாக்களால் கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. ஸந்நிதிக்குள் அர்த்தமண்டபமும் முன்புள்ள மஹாமண்டபமும் மிகவும் வேலைப்பாடுடன் அமைந்திருக்கின்றன. இந்த மஹாமண்டபம் மூன்றுபாகங்களாக உள்ளது. இருபக்கத்திலும் விசித்ரமான சித்திரங்களையுடைய கம்பங்களாலான மண்டபங்களும் நடுவில் விசாலமான கூடமுமாக அமைக்கப்பட்டு இருக்கிறது. இம் மண்டபங்களில் இருபக்கத்திலும் நடுவில் ஓர் சிறிய மண்டபமும் மேடையும் அமைந்திருக்கிறது. இது நூற்றுக்கால் மண்டபமெனப்படுகிறது. இதிலுள்ள சித்திரங்கள் அவசியம் பார்க்கவேண்டியவை. இங்குள்ள முக்ய சித்திரங்களாவன:-

இடதுபாகத்தில் மேற்கே 'ஸஹோவிலெ ஸ்ரீந்ருஸிம்ஹ: வெஷஷே ௦ ஸ்யம் உஷ்' என்றபடி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் வ்ருத்தயதியாகவும் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அவரிடத்தில் காஷாயாதிகளை ஸ்வீகரிப்பதாகவும் ஓர் சித்திரம் உள்ளது. ஒவ்வொரு கம்பத்திலும் இழைப்புவேலைகளும் சித்திரவேலைகளும் அபாரமானது. ஸுமார் 16-அடி சுற்றளவுள்ள தூண்களில் அடியிலிருந்து நுனிவரையிலும் ஸிம்ஹங்களும், யாளிகளும், யானைகளும், வீரர்களுமாக எட்டு மூலைகளிலும் செதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் நேர்மையை நேரில் கண்டு அநுபவித்தால்தான் தெரியும். நடநர்த்தகாதி கலைஞர்களுடைய கேளிக்கைகளை விளக்கும் சித்திரங்கள் பேசுந்தன்மையுள்ளவைகளாய் விளங்குகின்றன. நடுவில் உள்ள மண்டபத்தைச் சுற்றியுள்ள கம்பங்களில், தெற்கில் யோகந்ருஸிம்ஹனும், அதன் பக்கத்தில் பூதேவியுடன் லாலனம் செய்யும் க்ரோடாந்ருஸிம்ஹனும், அதற்கடுத்தபடியாக ஆதிசேஷபீடத்தில் லக்ஷ்மியுடன் காரஞ்ஜந்ருஸிம்ஹனும், அதற்கு வடக்கில் விற்பிடித்தகையுடன் செஞ்சுலக்ஷ்மியின் முகவாயில் கையை வைத்துக்கொண்டிருக்கும் அஹோபிலந்ருஸிம்ஹனும், அதற்கடுத்தாற்போல் கம்பத்தைப் பிளந்துகொண்டு கிளம்பும் உக்ரந்ருஸிம்ஹனும் (பக்கங்களில் ப்ரஹ்லாதனும் ஹிரண்யகசிபுவும் நிற்கின்றனர்) அடுத்த தூணில் கத்தி கேடயங்களுடனிருக்கும் ஹிரண்யகசிபுவுடன் யுத்தம் செய்யும் ந்ருஸிம்ஹனும், இதற்குக் கிழக்கிலிருக்கும் கம்பத்தில் அஷ்டபுஜங்களுடன் கூடியவராயும் திருவடிவாரத்தில் வலபாகத்தில் ப்ரஹ்லாதனையுடையவராயும் மடியில் ஹிரண்யகசிபுவைப் போட்டுக்கொண்டும் அவனது குடலையெடுத்து மாலையாகப்போட்டுக்கொள்ளுகிறவராயுமிருக்கும் ஜ்வாலாந்ருஸிம்ஹனும், அதற்கடுத்துள்ள கம்பத்தில் லக்ஷ்மியுடனும் அபயஹஸ்தத்துடனும் சங்கசக்ரங்களுடனும் கூடிய மாலோலனும் சித்திரரூபமாக எழுந்தருளியிருப்பது நோக்கற்பாலது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸௌஜந்ய பரிமளம்

(வாதி விஜயம்)

○

பிராட்டியின் வைபவத்தைப் பற்றி பட்டரும் நஞ்சீயரும் அருளிச்செய்திருப்பதை எடுத்துக்காட்டினோம். புருஷகாரத்வத்தோடு உபாயத்வமும் உண்டென்பது ஸ்ரீ தேசிகன் செய்தருளும் ஸித்தாந்தம். இதை வேறோரிடத்தில் நிரூபித்திருக்கின்றோம். இப்படி ஸ்ரீதேசிகன் நம் ஸித்தாந்தாவலம்பிகளுக்குள் ளேயே வரும் சில விப்ரதிபத்திகளில் யதோசிதம் செய்யவேண்டிய நிஷ்கர்ஷத்தைச் செய்தருளினார் என்பது இதுவரையில் பேசப்பட்டது. இனி பரமதநிரஸநம் செய்தருளினதைப் பற்றிச் சிறிது பேசுகின்றோம்.

பரமதநிரஸநம் க்ரந்தமுகத்தாலும் ஸாக்ஷாத் வாதப்ரவ்ருத்தியாலுமாக இருவிதமாயிருக்கும். இதில் சததூஷணீ (ந்யாயபரிசுத்தி) ஸர்வார்த்தஸித்தி... இவற்றால் செய்தருளியது முதல்விதம். இரண்டாவது விதம் ஸ்வாமி விபவத்தில் எழுந்தருளியிருக்கும்போது செய்தருளியது. இது நடந்தது ஸ்வாமி வைபவத்தைப் ப்ரதிபாதிக்கவந்த எல்லா க்ரந்தங்களிலுமே ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது.

‘ஶ்ரீமத் க்ருஷ்ணமிஶ்ரோ விஜிதோ
விஸ்மயேந வீதகர்வோऽத ஹர்ஷ: |
யேந கவிஸிம்ஹகர்ஜனா தேந
ஸநாதா வயம் ஹ்ருஷ்டம் ஸர்வத: ||’

‘ஜிஹ்வா கவிம் டிம்டிமவாதிஹம்ஸம்
க்ருத்வா ச க்ருஷ்ணாஹ்வயமேநோஜஜ்ஞௌ |
ஸ்துத்வா தேந ஸர்வத்ர யஃ
தமாஶ்ரயே ஸர்வகலாஸு தந்த்ரம் ||’

என்று வைபவப்ரகாசிகையில் க்ருஷ்ணமிச்ரன் டிண்டிமன் ஆகிய இருவரோடு வாதம் நடந்து ஸ்வாமி ஜயித்தது ப்ரதிபாதிதமாயிருக்கின்றது. க்ருஷ்ணமிச்ரனோடு நடந்த வாதம் ஆசார்ய சம்புவில் வெகு விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியை இங்கு மொழிபெயர்த்து எழுதுகின்றோம்.

‘ஸ்ரீமுஷ்ணத்திலிருந்துபுறப்பட்டு ஸ்ரீதேசிகன் ஸ்ரீரங்கநாதனை ஸேவிப்பதற்காக எழுந்தருளிக்கொண்டிருக்கும்போது மார்க்கத்தில் ஸ்ரீரங்கவாஸிகளான ஜநங்கள் சிலர் வந்து தண்டன் ஸமர்ப்பித்து மிகுந்த விநயத்துடன் ஒரு பத்ரிகையைக்கொடுத்து இப்படி விண்ணப்பமும் செய்தார்கள்’.

“வாக்சாதுர்யமுள்ளவர்களில் சிறந்தவனான மாயாமதத்தில் பற்றுள்ள க்ருஷ்ணமிச்ரன் என்ற ஒருவன் வண்டி வண்டியாகப் புஸ்தகங்களைக் கொணர்ந்து மிகப் பெரியவனாகத் தன்னை காட்டிக்கொண்டு வெகு அஹங்காரத்துடன் பலபடியாக வாதம் செய்யும் நோக்கத்துடன் ஸ்ரீரங்கத்திற்கு வந்திருக்கிறான்.”

“பகவத்ராமாநுஜஸித்தாந்தாவலம்பிகளான அங்குள்ள ஸஜ்ஜநர்கள் தேவரீர்களுடைய திருவாக்கு அவன் கர்வத்தை அடக்குமென்றெண்ணி கவிதார்க்கிக ஸிம்ஹமான தேவரீருக்கு மிகுந்த ப்ரீதியோடு இந்த ஆஹ்வாநபத்ரத்தை அனுப்பினார்கள். தேவரீர்கள் எழுந்தருளுவதால் அவர்களுடைய மனோரதம் தலைக்கட்டிற்று.”

“இப்படி ஸ்ரீரங்கவாஸிகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீதேசிகன் அவ்வழைப்புத் திருவோலையை மிகவாதரத்தோடு சிரஸ்ஸில் வைத்துக் கூடவருபவர்களோடு களிப்புற்றார்.”

“பிறகு காவேரியை அடைந்து தீர்த்தமாடி ஸ்ரீரங்கமெழுந்தருளினர்.”

“சிஷ்யவர்க்கங்களோடு ஸ்ரீ தேசிகன் எழுந்தருளுவதைக்கேட்டு ஸ்ரீரங்கத்திலுள்ள வித்வத்கோஷ்டி ஸூர்யனை பத்மவநகாந்திபோல எதிர்கொண்டழைத்தது.”

“குசலப்ரச்நம் பண்ணுகிற ஸ்ரீயதிராஜஸூக்திபரிசயசீலர்களான அந்த மஹநீயர்களை ஸ்ரீதேசிகன் பக்தியுடன் உபசரித்தார்.”

“பிறகு ஸ்ரீரங்கநாயகியையும் அழகியமணவாளனையும் ஸேவித்து ப்ரஸாதம் பெற்று

ஸந்துஷ்டராய் ப்ரீதிபரவசர்களான ஸ்ரீரங்க வாஸிவித்வத்ஜநங்கள் தொடர்ந்துவரத் தமது வாஸஸ்தானத்தை அடைந்தார்.''

''அதன் பிறகு க்ருஷ்ணமிச்ரனை அடக்க விரும்பிய ஸ்ரீரங்கவாஸிகள் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் விண்ணப்பித்ததாவது — அளவிடமுடியாத எங்கள் புண்யங்களால் தேவரீர் இந்த மண்ணுலகில் அவதரித்திருக்கின்றது. கவிதார்க்கிககேஸரியான தேவரீர்களுடைய ப்ரபாவம் சொல்லின் எல்லைக்குப் புறம்பானது.''

''க்ருஷ்ணமிச்ரனுடைய வித்யா மதத்தை தேவரீர் அடக்கவேணும் திகந்தவிச்ராந்தமான புகழ்பெறவேணும்.''

''யதிராஜஸித்தாந்தலக்ஷ்மிக்கு அலங்காரம் தேவரீர் ஒருவரே. சந்திரன் தவிர வேறு யார் சிவன் முடியை அலங்கரிப்பர்? மதுரையான வாக்தேவியினால் ப்ரஹ்மாவின் முகங்கள்போல் நான்கு வேதங்களும் தேவரீருடைய திருவாக்கினால் அழகுபெற்றன.''

''கவிதார்க்கிகஸிம்ஹமான ஸ்ரீ தேசிகன் அவர்களுடைய நியமநத்தை சிரஸா வஹித்து க்ருஷ்ணமிச்ரனோடு வாதஞ்செய்யக்கருதினர்.''

''வேதங்களாகிற தாமரஸ புஷ்பங்களுக்கு வண்டுபோன்ற ஸ்ரீதேசிகனுடைய வாதயுத்த சாதுர்யத்தைப் பார்ப்பதற்காக நாநாதிக்குகளிலிருந்தும் வந்த மஹாவித்வான்கள் முன்னமே கூடி நெருக்கமாக நின்ற ஸ்ரீரங்கநாதனுடைய ஆஸ்தாநமண்டபத்திற்குச் சென்று அந்த ப்ரதிவாதியோடு வேதம் வ்யாகரணம் வைசேஷிகம், ஸாங்க்யம், கௌமாரிலம், ப்ராபாகரம், சாங்கரம், ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தம், ஸேச்வரஸாங்க்யம் இவை முதலிய வித்யாஸ்தாநங்களில் பதினெட்டு நாள் மிகுந்த உத்ஸாஹத்தோடு வாதப்போர் புரிந்தார்.''

''ஒவ்வொரு நாளும் ஸ்ரீ தேசிகனுடைய வாக்சாதுர்யம் மேல் ஓங்கி நின்றது. மழை காலத்து மேகம் முழங்கிநிற்கும்போது வெய்யிற்காலத்து வேகம் வளருமோ.''

(''ஶ்ருதிதரவையாக்ருநாதஹ்ருத்பத்மவ்ருத்தவ்ருக தாரஸவத் நமோஹஷாஸம்ஶயஸ்ய ப்ரக்ஷாநு விக்ரதீவவநள்வாநு வேதவ ப்ரயாயுவயே விஶதவிஜயத்ருஷ்ணீ க்ருஷ்ணப்ரோ பஹுவ'')

''மற்றெவருக்கும் கிடையாத ஹ்ருதயகமலத்தில் வீற்றிருக்கும் ஹயக்ரீவனுடைய கனைப்பு ஶப்தங்களோ இவை என்ற ஸம்சயத்தை மிக மிகத் தருவனவான சொற்ப்ரவாஹங்களை ஸ்ரீதேசிகன் பெருக்க, க்ருஷ்ணமிச்ரன் தாம் ஜயிப்போமென்பதில் ஆசையை யறவே இழந்தான்.''

''கவிதார்க்கிகஸிம்ஹம்சொற்பொழிவுகளால் அவன் தோற்றுநிற்க, யதிராஜஸித்தாந்தலக்ஷ்மி ஆதங்கமற்று சரத்காலத்தில் சேறில்லாப் பூமிபோலவும் மேகமில்லா வானம் போலவும் விளங்கிற்று.''

''இப்படி ஸ்ரீதேசிகன் விஜயஸ்ரீயை மணக்கும்போது அங்கு ஸபையில் கூடியிருந்தோர் செய்த ப்ரசம்ஸாவாக்யங்களே மந்த்ரங்களாயின.''

''க்ருஷ்ணமிச்ரனும் விநீதனாய் ஸ்ரீதேசிகனைப் புகழ்ந்தான்.''

''இப்படி இறுமாப்புள்ள எதிரிகளின் கொழுப்பை அடக்கி ஸ்ரீரங்கத்திலுள்ள ஸத்துக்களுடைய ஹ்ருதயரஞ்ஜநம் செய்தருளிய ஸ்ரீதேசிகன் ....ப்ரதிவாதியினால் செய்யப்பட்ட ப்ரபோதசந்த்ரோதயத்தின் சீர்மையை இல்லையாக்கவல்ல......ஸங்கல்பஸூர்யோதயம் என்கிற நாடகத்தையும்......மற்றும்......ப்ரபந்தங்களையும் செய்தருளினர்.''

''வியன்கலைகள் மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமற'' என்னும் பிள்ளையந்தாதிப் பாசுரத்தையும் காண்க. ஸங்கல்பஸூர்யோதயத்தில், ஸ்வாமி தாமே-

''ஶஹா கபோலஷஹாஷாவேதீ தத்தஹ்ருஷ்ட ஹாஷயாஉவி தாகிஶாநோதாநு வ்ருதி க்ஷேவஸ்ராதி''

''ஶவி வ வயயேதாவஷேநஹஸம் ஶநே கஸாஹஸ்ரவே தண்ஶண்ய ணேதஷ தண்ரவோய வாண்ரஶோரயகண்டநே வாயஹளவாடாதிகடக்ஷே ஶவண்தாஹ க்ஷாராநிஷண்கேந நீதிவண்ணாவயேந நிஶஉ ஸஞ்ஜுரேஷ ஸஞ்ஜுரோணா:...''

என்று தம்முடைய ஸர்வதேசவாதிவிஜயத்தை நிர்த்தேசிக்கின்றார். இதையே இரண்டாவது

அங்கத்தில் நாடகப்ரக்ரியையில் தத்பரமாகக் காட்டியருளுகின்றார். வாதம் செய்து பிறரை அவமானப்படுத்துவது கூடாதென்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அப்படியிருக்க ஸ்வாமி இப்படிச் செய்தார் என்பது அவத்யமேயாகுமென்று சங்கை எழக்கூடும். ஸ்வாமி தாமே இந்த சங்கையை உத்தாபநம் பண்ணி பரிஹரித்திருக்கின்றார்—

"[illegible]?"

[illegible]"

என்று ஸங்கல்பஸூர்யோதயத்தில் தாம் சிஷ்யஸ்தானத்தில் நின்று சங்கையைப்பண்ணி குருமுகத்தால் பரிஹாரத்தை ஸாதித்தார். 'விதிநிஷேதங்களுக்குப் பல காரணங்களினால் வ்யவஸ்தை எங்குமுண்டு. அப்படியே இந்த ஸாமாந்ய நிஷேதத்திற்கும் வ்யவஸ்தை உண்டு. குத்ருஷ்டிகளையும் வேதபாஹ்யர்களையும் வாதத்தில் நிரஸநம் பண்ணும் விஷயத்தில் அந்த நிஷேதம் ப்ரவ்ருத்திக்காது. ஆனால் நானே செய்யலாமே என்னில், நிச்சயமாய்ச் செய்யலாம். அதில் அவத்யலேசமுமில்லை. ஆனால் நான் இப்போது பற்றியிருக்கும் நியமத்திற்கு அது விருத்தம். ஆகையால் நான் ஸாக்ஷாத் செய்யாமல் உன் த்வாரா செய்ய விரும்புகின்றேன் என்பது' இங்கு குரு வார்த்தையின் ஸாரம். பரமதபங்கத்தில் இன்னும் விசதமாக இந்த விஷயம் ஸாதிக்கப் பட்டிருக்கிறது—

"[illegible]" இத்யாதிப்ரமாணங்களாலும் '[illegible]' என்று அக்ஷபாதோக்த ப்ரகாரத்தாலும் விஜிகீஷு கதையிலே நின்று [illegible] நிரஸிக்கை ப்ராப்தமாகையாலே '[illegible]' '[illegible]' இத்யாதிகள் வீதராகவிஷயநியதங்களாகக் கடவன."

என்பது அங்கு ஸமுதாயதோஷாதிசாரத்தில் உள்ள ஸ்ரீஸூக்தி. 'ந ஹிம்ஸ்யாத்' என்ற ஸாமாந்ய நிஷேதத்திற்கு '[illegible]' என்கிற விசேஷவிதியினால் ஸங்கோசம் என்று மீமாம்ஸகர் சொல்லும் ந்யாயத்தாலே '[illegible]' ஸாமாந்ய நிஷேதத்திற்கு '[illegible]' இத்யாதி விசேஷ விதியினால் ஸங்கோசமென்று சொன்னதாகின்றது. "நிரஸிக்கை ப்ராப்த"மென்று ஸாதித்திருப்பதைக்குறிக்கொள்ளவேணும். சக்தர்கள் குத்ருஷ்டிப்ரப்ருதிகள் ஸமீசீநஸித்தாந்தத்தை ஆக்ஷேபித்து தூஷிக்கும்போது அவர்களை நிரஸிக்கவேண்டியது விதிபலப்ராப்தமென்றதாயிற்று. ஆசார்யர்களோ சிஷ்யர்களோ மற்றவர்களோ எல்லாருக்கும் ஸ்வஸ்வாதிகாரத்தினாலேயே [illegible] மற்றவர்களுடைய ஆஜ்ஞையோ ப்ரார்த்தனையோ [illegible]ன்

199532

றும் வேண்டியதில்லை. விச்வாமித்ரர் தானே சபித்து ராக்ஷஸர்களை மாளவைக்கலாம். ஆனால் அவர் வ்ரதவிசேஷதீக்ஷிதராகையால் தத்ஸமயத்தில் அப்படிச் செய்வதற்கில்லை. அதனால் ஸ்ரீராகவனை நியமித்தார். இதே ந்யாயம் ஸங்கல்பஸூர்யோதயத்தில் குரு ஸ்வயமே பரமத நிரஸநம் பண்ணுதவிஷயத்தில். இப்படித்தான் செய்யமுடியாமல் இருக்கும் காரணத்தினால் சிஷ்யனை ப்ரேரணம் செய்ததேயன்றி குருவின் ப்ரேரணமிராவிட்டால் சிஷ்யன் விதிபலப்ராப்தமான பரநிரஸநத்தைச் செய்யக்கூடாது என்பதற்காகவன்று என்பது ஸ்பஷ்டம். இவ்வித நியமம் கல்பிக்க இங்கு ஒரு ஆதாரமுமில்லையென்பது மாத்திரமன்று. எங்குமே இல்லை.

இப்படி குத்ருஷ்டிகளையும் பாஹ்யரையும் நிரஸநம் பண்ணவேணுமென்பதனால் அவர்கள் ஸ்வக்ருஹங்களில் ஸ்வகோஷ்டிகளில் அவர்களுடைய ஸித்தாந்தங்களை உபபாதித்துக் கொண்டிருக்கும்போதும் நாம் ஹடாத்காரேண அவர்களை வாதத்திற்கு இழுத்து சச்சரவு பண்ணவேணுமென்பது கிடைக்காது. இப்படிச் செய்வது துர்ஜநசேஷ்டிதமே. ‘தேவதாஶாஸ்த்ரநிந்தகாந்’ ‘வைதேஶாஸ்த்ரவித்³வேஷகாந்’ என்றபடியினாலே நம் ஸித்தாந்தத்தையும் ஆசார்யர்களையும் அவர்கள் ஆக்ஷேபிக்கும் போதும் தூஷிக்கும்போதும் நாம் அவர்களை நிரஸிக்கவேணுமென்பது கருத்து.

இப்படி குத்ருஷ்டிகளையும் பாஹ்யர்களையும் வாதத்தில் வெல்லலாம் என்னில் நிஷேதத்திற்கு இலக்கானவர்கள் யார் என்ற கேள்விக்கு ‘வீதராகவைதிகவிஷயநியதம் அது’ என்று ஸ்வாமி ஸமாதாநம் ஸாதித்திருக்கின்றார். வீதராகர் செய்யும் வாதத்தில் ஒருவரையொருவர் அவமானப்படுத்தக்கூடாது. வைதிகாஶ்ரவாதியான ஒருவரை வாதத்தில் பரிபவப்படுத்தக்கூடாது என்பது பொருள்.

இங்கு வீதராகபதம் பாரிபாஷிகம். வாதம் ஜல்பம் விதண்டை என்று வாதம் அல்லது கதை எனப்படும் சர்ச்சை மூன்றுவிதம். ‘வீதராககதா வாத:’ என்று வாதத்திற்கு லக்ஷணம் சொல்லப்பட்டது. வீதராகர் எனப்பட்டார் யார்? என்ற கேள்விக்கு உத்தரமாக ‘ஶாஸ்த்ரஶிஷ்ய ஸ்வப்ஸூவா ஶிஶிஷ் ஶ்ரோத்ரிய ஶ்ரேயோऽர்தின: வீதராகா:’ எனப்படுகிறது. எனவே இவர்கள் ஸந்தேஹநிவ்ருத்திக்காகவும் ஸம்வாதத்திற்காகவும் விஷய சர்ச்சை செய்யும்போது பரஸ்பர ஜிகீஷையும் பரிபவேச்சையும் கூடாதெனப்படுகின்றது. ஜல்பத்தையோ விதண்டையையோ குத்ருஷ்டி பாஹ்யர்கள் விஷயத்தில் செய்யும்போது அவை அவச்யம் இருக்கவேண்டியவையே தோஷங்களாகா எனப்படுகின்றது. ஆகவே ‘தேசிகன் பரமவீதராகராயிற்றே இவர் தாம் வாதிவிஜயத்திற்குப் போயிருப்பாரா’ என்ற சங்கைக்குச் சிறிதுமிங்கு இடமில்லை. நம் ஸித்தாந்த விரோதிகளான வாதிகளை நிரஸநம் செய்யவேண்டியது அவச்யம் என்பதற்காகவே இந்த ஸ்ரீஸூக்தி அவதரித்தது.

‘ஸதேந ‘விக்ரஹம் நிஜித்ய வாதத:’ ‘ந விக்ரஹ்ய கதா கார்யா’ இத்யாதிஜல்ப விதண்டயோ நிஷேதோ விஶிஷ்டவிஷய இதி தர்ஶிதம்। கதாவிஷ பராஹ்யகாதூரஷ்டி ஹரூப உபயோகவி கார்யகாஸ்தகதாவாக்ஷ வாதஸித்த்யை:— ‘தத்வாத்யவஸாயஸம்ரக்ஷணார்தம் ஜல்பவிதண்டே பீஜப்ரரோஹஸம்ரக்ஷணார்தம் கண்டகஶாகாவரணவத்-இதி’ என்கிற ந்யாயபரிசுத்தி ஸ்ரீஸூக்தியிலும் இது வ்யக்தம். நிஷேதம் விசிஷ்டவிஷயமென்றால் விசிஷ்டர் விஜிகீஷு கதையாகிற ஜல்ப விதண்டையைச் செய்யக்கூடாதென்று பொருளல்ல. விசிஷ்டரை ஜயிக்கும் நோக்கத்தில் அவரை ப்ரதிவாதியாகவைத்துச்செய்யக்கூடாதென்று பொருள். இப்படி ஶாஸ்த்ரரீதியில் நிஷேதமிராவிட்டாலும் ப்ரத்யுத விதியே உளதென்றாலும் சிலர் ஸ்வபாவத: விஜிகீஷு கதையில் ப்ரவ்ருத்தியேயிராமல் இருக்கக்கூடும். இப்படி தேசிகன் இருக்கக்கூடாது. ஸித்தாந்தஸ்தாபநம் இவராலேயே ஆகவேண்டியிருப்பதால் மதாந்தரஸ்தர்கள் ஆக்ஷேபிக்கும் போது நம் ஸித்தாந்தத்திற்கு சைதில்யம் வராமல் ஸ்தாபிக்க இவர் ஸர்வப்ரயத்நமும் பண்ணவேணுமென்று ஸ்ரீமத் வரதாசார்ய வரதிஹம்ஸாம்புதாசார்யர்கள் நியமித்தார்கள்.

இதைத் திருவுள்ளம்பற்றி தேசிகன் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில்—

[illegible]

என்று குருவசநத்தை நிபந்தித்தார்.

[illegible]' என்று தமது அங்கீகாரத்தையும் ஸூசிப்பித்தார்

'[illegible]'

என்ற குருவின் ஆசிர்வாதத்தைச்சொல்லும் ஸ்ரீஸூக்தியினாலும் இது ஏற்படுகின்றது. இது தவிர தத்காலத்தில் எழுந்தருளியிருந்த ஸர்வமஹான்களும் பகவத்ராமாநுஜஸித்தாந்தஸ்தாபநவிஷயத்தில் ஸ்வாமியையே ப்ரதாநஸ்தாநத்தை வஹிக்கும்படி ப்ரார்த்தித்தார்கள் என்பதும் அது அப்படியே நடந்துவந்தது என்பதும்—

'[illegible]...'

என்ற யதிராஜஸப்ததி ஸ்ரீஸூக்தியால் வ்யக்தம். குருபரம்பராப்ரபாவத்திலும் (104ம் பக்கம்)—

'பின்பு திருவரங்கத்திருப்பதியில் மாயாவாதவித்வான்கள் அநேகர் கூட்டமாய்வந்து 'இப்போது நமக்கு உத்தரம் சொல்லி ராமாநுஜஸித்தாந்தத்தை நிர்வஹித்துக் கொள்ளுங்கள், இல்லாவிடில் நம்முடைய ஸித்தாந்தத்தில் சேரக்கடவீர்கள்' என்று ப்ரபல நிர்ப்பந்தம் பண்ணிக்கொண்டிருக்க, அப்பொழுது ச்ருதப்ரகாசிகாசார்யரான ஸுதர்சனபட்டரை அங்குள்ளார்தண்டன் ஸமர்ப்பித்து 'இப்போது செய்யப்படுவதென்' என்று கேட்க அவரும் 'இந்த ஸித்தாந்தத்திற்கு ப்ரவர்த்தகராகும்படி உடையவர் திருவுள்ளக் கருத்தறிந்த நம் அம்மாள் தூப்புல்பிள்ளையை அநுக்ரஹித்தருளினபடியினாலே இப்போது அபிவ்ருத்தராய் ஸித்தாந்தப்ரவசநம்பண்ணிக்கொண்டு பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருக்கிற அவரைக்கொண்டே ஸித்தாந்த நிர்வாஹம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்றருளிச்செய்ய....'

என்றிருப்பதும் அநுஸந்தேயம். இதற்கு மேல் இன்னொரு விசேஷமும் ஸங்கல்பஸூர்யோதயத்திலிருந்து தெரிகின்றது. வாதிகள் வந்தபோது அவர்களோடு சர்ச்சை செய்யக்கூடிய சக்தி வாய்ந்த அபிஜ்ஞர்கள் பலர் அப்போது இருந்தனர். ஆனால் அந்த வாதிகள் தேசிகனோடேயே வாதம் செய்யக் குதூஹலம் கொள்வார்களாம். இதை ஸ்வாமி தாமே ஸாதிக்கின்றார்—

[illegible]

என்று.

இதில் தேசிகன் வாதத்திற்கு எழுந்தருளினால் இவர் ஜயிப்பது நிச்சயம் என்ற நம்பிக்கை எல்லோருக்குமிருந்தது என்ற விசேஷமும் கூறப்பட்டிருக்கின்றது. இப்படி வாதகோஷ்டிகளில் ப்ரகாசிதமான வைபவத்தைப் பற்றியே 'கவிதார்க்கிகஸிம்ஹ:' 'கவிவாதிஸிம்ஹ:' 'ஸவிகதகஸிம்ஹ:' என்றிப்படி பிருது வழங்கிற்று. கேவலம் க்ரந்தகாணமாத்ரமே உளதாகில் இவ்வித பிருதிற்குச் சிறிதும் ஔசித்யமில்லையென்பது ஸ்பஷ்டம்.

சரித்ரவிஷயத்தில் விரோதம் தோற்றினல் அதன் பரிஹாரத்திற்காகப் பல ந்யாயங்கள் கையாளப்பட்டு வருகின்றன. அவற்றைக் கொண்டு க்ருஷ்ணமிச்ரன் கதையை நாம் உபபாதிக்கவேண்டும். மிச்ரன் பதினென்ருவது அல்லது பன்னிரெண்டாவது நூற்ருண்டிலிருந்தது உண்மையானல் அவன் ஸந்ததியில் உண்டான இன்னொரு க்ருஷ்ணமிச்ரன் ஸ்ரீதேசிகனோடு வாதத்திற்கு வந்திருக்கவேண்டும். இவன் தனது பூர்வராலே செய்யப்பட்ட ப்ரபோதசந்த்ரோதயத்தைக் கொண்டுவந்து காட்ட அந்த க்ருஷ்ணமிச்ரன் வேருகிலும் அதே குலத்தைச் சேர்ந்தவனுதலால் பேதத்தைப் பாராமல் க்ருஷ்ணமிச்ரன் செய்தது என்ருர்கள். அக்ஷபாதர் என்கிற கௌதமரின் வம்சத்தில் உதித்த ஒருவர்தான் ந்யாய ஸூத்ரங்களுக்குக் கர்த்தா என்பது விமர்சகர்களின் நிர்ணயம். நாம் வ்யவஹரிப்பது அக்ஷபாதர் செய்ததாகவே. எத்தனை சோழராஜாக்கள் எத்தனை பாண்டியராஜாக்கள் ஒரே பெயருடன் விளங்கினர்கள். அதேபோல் ப்ரக்ருதத்திலும்.

சிலாஶாஸநங்கள் இருந்தும் பல விஷயங்களில் இன்னும் சரித்ரகாரர்களுக்குள் ஒரு நிர்ணயம் ஏற்படாமலே இருக்கின்றது. க்ருஷ்ணமிச்ரகாலமும் அவ்விதமான விஷயமே. கி. பி. 1050–1116 இதன் மத்தியில் ப்ரபோதசந்த்ரோதயம் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று ஒரு ஊஹம். கி. பி, 1097–1165 காலத்தில் காமகோடிபீடத்தில் இருந்த ஒரு சங்கராசார்ய யதியின் ஸமானகாலிகன் க்ருஷ்ணமிச்ரன் என்று எழுதப்பட்டிருப்பதாகவும் சொல்லுகின்றனர். நம் வைபவப்ரகாசிகையின்படி தேசிகனின் ஸமகாலிகன் என்னவேண்டியிருக்கிறது. இந்த ஒரு வ்யக்தி விஷயம் எப்படியிருந்தாலும் பல மதாந்தரவாதிகள் வந்து நம் ஸித்தாந்தத்தை ஆக்ஷேபித்தார்களென்பதிலும் அப்போது வாதங்கள் நடந்தனவென்பதிலும் அவற்றில் தேசிகன் ஸமாதானம் ஸாதித்து அவர்களை நிரஸித்து ஸித்தாந்தஸ்தாபநம் செய்தருளினர் என்பதிலும் எல்லா ப்ரமாணக்ரந்தங்களும் ஏககண்டமாயிருப்பதால் இதில் விப்ரதிபத்திபண்ண அவகாசமில்லை.

ஆக்காத சோல்முடியின் ஆசிரியன் அய்யனவன்
தாக்காது தணிந்திருந்தால் தணிவில்லா தருக்கணத்தோர்
வாக்காற்று வடமாகி வேரறுபட் டடிசாய்ந்து
பூக்காதே காய்க்காதே நம்சமயம் பழுக்காதே.

———

ஸ்ரீ:

உபயவேதாந்த ஐககண்ட்யம்

மூன்ரும் பாசுரம்

நீர்நுமதேன்றிவை வேர்முதல்மாய்த்து
இறைசேர்மினுயிர்க்கதன் நேர்நிறையில்லே.
(திருவாய்மொழி 1-2-3)

"ஆத்மநாசகமான அஹங்காரமமகாரங்களை வேரோடு அறுத்து ஸ்வாமியை ஆச்ரயிங்கோள்" என்று ஆருயிரம். 'வேர் முதல்' என்பதால் 'அநாத்மாவினிடத்தில் ஆத்மபுத்தியும், தன்னுடைய ஸ்வம் அல்லாததில் தன் ஸ்வம் என்கிற புத்தியும், அவித்யை என்னும் வ்ருக்ஷம் முளைத்து ஓங்கிவளர்வதற்கு இரண்டு விதமாயுள்ள விதை' என்ற வசநத்தையும், இந்த ரோகத்திற்குத்தவருத மருந்து "[illegible]" என்கிற வசநத்தையும் ஈடு உதாஹரித்தது. வ்யாதியையும் அதற்கு மருந்தையும் சேர்த்துப் பாடுகிருர். இவர் உயிரை ஜீவிப்பிக்கும் வைத்யர். மந்வாதிகளைப்போல, '[illegible]', மநுரிஷி எந்த வார்த்தை சொன்னலும் அவை யாவும் ஆத்மஜ்ஞாநிகளுக்கு ஸம்ஸார பேஷஜமாகுமென்று ச்ருதி மநுரிஷி விஷயத்தில் கூறிற்று. 'வேர்முதல்' என்று இருப்பதற்கு நேர் அநுகுணமாக "[illegible]" என்று தொடங்கி "[illegible]

நம ஸர்வி ரமுகஶ உ்ஷஹஜஸஷேண உ ஜ ஸெந விகவா'' என்று கீதை 15-வது அத்யாயத்தின் தொடக்கத்தில் பாடிய ச்லோகங்களையும் ஸூசிப்பதில் திருவுள்ளம். ''நீர்நுமது என்று இவை'' என்பதில் 'நான் என்னதென்று தன் வாக்காலே சொல்லமாட்டாரே நாக்கு வேமென்றே' என்று ஈடு காட்டிய ரஸம். மற்றோர் ரஸமும் கொள்ளலாம்; 'இறைசேர்மின்' என்று பரமாத்மாவின் ஸமாச்ரயணத்தில் ''நானே நீ என்னுடைமையும் நீயே'' என்று பாடுகிறபடிக்கும் 'கூம வா கஉஹஊவி ஜெவதெ கஉஹம வெ கூஊவி' என்றும் 'கஉஹஜெவாயஹூாக கஉஹஜெ வொவவிஷாக' என்று பூமவித்யையிலும் 'தானேயெம்பெருமான் அவனென்னாகியொழிந்தான்' என்று பாடுவதுபோல தான் என்பதே பகவானை விட்டுத் தனியே நினைக்கவும் அநுபவிக்கவும் முடியாமல் தனக்கு இருப்பென்பதே ஸ்வதந்த்ரமாயும் தனித்தும் கிடையாது. 'நின்னலாலிலேன்காண்' 'என்னை நீ தந்தாக்கினையே' என்று முதலிய பரமாத்மாவினிடம் அஹங்க்ரஹோபதேசங்களையும் இறையானவன் விஷயத்தில், 'நான் என்பது நீரே, எனதென்பது உமதே', 'ஐ நாய யஷவிதெ யொஹூஹம ஸகூமம தஜி தவெவ ஊயவ நியத ஹஃ' என்று 'நீர் நுமது' என்பதைக் கூறி அநுஸந்திப்பதையும், இச்சொற்களை இறைசேர்மின், இறைவிஷயத்தில் 'சேர்மின்' என்றும் ஸூசிக்கிறார் போலும். 'நானுமெனதும் நீரும் நுமதுமே' என்பதும் 'தவாஸ்மி வ யாவதெ', 'கவஹ தாஹம தவாஸ்மி' என்று முதலிய இறையைபாச்ரயித்துச் சேரும் வசநங்களுக்குப் பொருந்தும். 'சேர்மின்' என்கிறார்காணும் கெடுமரக்கலம் கரைசேர்ந்தாப்போலே' என்று ஈடு ஸாதித்தது. இத்திருவாய்மொழி கடைசிப் பாசுரத்தில், 'சேர்த்தட' என்று சாரீரகசாஸ்த்ரத்தின் முடிவில் ஸம்ஸாரஸாகரத்தின் அக்கரையாகிய தடத்தைப் பாடுவதற்கு ஒத்ததாகும். 'இறைசேர்மின்' என்று பாடினதும் 'உயிர் என்பதால் சேர்ந்தபிறகுதான் உயிர் உயிராவதென்பதை ஸூசிக்கிறது. சமம், தமம், தப்பமில்லாத வேதாந்தவிஹித பால்யம் முதலிய ஸாதநகுணங்கள், 'சஷஊஷூ ஷெவதஹஸ்ராக' 'வாஜெந திஷாவெஸ' முதலியதால் 4-ம் பாதத்தில் காட்டப்படுவதையும் ஸூசிக்கிறார்.

நான்காம் பாட்டு

இல்லது முள்ளதும் அல்லது அவனுரு
எல்லையிலந்நலம் புல்கு பற்றற்றே.
(திருவாய்மொழி 1–2–4)

இங்கே இரண்டாம் பாதத்தில் ஸ்வப்நாத்யதிகரணங்கள் முடிந்ததும் உபயலிங்காதிகரணத்தில் 'ஹுகூஜெதாவகூமஹி ஹுதிஷெயகி தஜொஷுவிதி வஹஹுயஃ' என்கிற ஸூத்ரத்தாலும் விசாரிக்கப்படும், 'வெவாவ ஹூஹணொ ரூபெ ஊதம வாஊதவெவ வ' என்று தொடங்கி மூர்த்தாமூர்த்தசேதநசேதந ப்ரபஞ்சங்கள் முழுவதும் ப்ரஹ்மத்தின் உரு-ரூபம் என்ற உபநிஷத்தையும் 'கஜொஉநஜெந தயாஹி விஜூ' என்று அந்த அதிகரணத்தின் நிகமந ஸூத்ரத்தில் அநந்தமான ஆநந்தம் முதலிய நலங்களோடு கூடியவன் பரன் என்றும் 'கூஹ வ தநூாதூ' என்றபடி அவன் ஸ்வரூபம் ஜ்ஞாநமும் ஆநந்தமும் என்றும் 'கவி ஷம ரூாயநெ ஹுதஷாந ஊநாஹூ' என்று அவனை இன்பபரவசமாய் அணைந்து தத்தேகநிஷ்டனாய் இருந்தால் அத்ருச்யமும் அவ்யக்தமுமான அவனும் ப்ரகாசிப்பான் என்றும் கூறியதையும், அஹிகுண்டலாதிகரணத்தில் இங்கு இல்லதென்று குறிக்கப்படும் மூர்த்தாமூர்த்த ஜடப்ரபஞ்சம் ப்ரஹ்மத்திற்கு சரீரமான அம்சம் என்றும், உயிரான ஜீவன்களெல்லாம் இரண்டாமத்யாயத்தில் அம்சாதிகரணத்தில் பகவானுடைய உரு–அம்சம் என்று கூறியதைப்போலவே ஜடப்ரபஞ்சமும் அவனுக்கு அம்சமென்பதை 'வடுவெவஆ' என்று காட்டுவதையும், 3-ம் பாதத்தில் 'கூநநூஷயஃ ஹுயாநஸூ' என்கிற அதிகரணத்

தில் அநந்தத்வமும் ஆநந்தத்வமும் மற்ற குணங்களும் கூடிய ப்ரஹ்மத்தை எல்லா உபாஸகர்களும்பற்றற்று புல்கவேணுமென்றும் கூறி இருப்பதையும் இப்பாசுரத்தால் ஸங்க்ரஹிப்பது ஸ்பஷ்டம். 'நத்ருஷ்டோஸ்தி ஸ ஏவ ஸர்வம் யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய' என்கிற வசநத்தையும் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்' என்கிற ச்ருதியையும் 'இல்லது முள்ளதும்' என்கிறதற்கு ஆதாரமாகக் காட்டிற்று. ஜடப்ரபஞ்சம் 'இல்லது' 'நாஸ்தி' என்று நினைத்துத்தள்ளப்படக் கூடியது 'ஶக்யதே வக்தும் யஸ்ஸதாஸ்தீதி கேவலம்' என்றபடி ஸர்வகாலமும் ஸர்வவஸ்து ப்ரகாரமாயும் ஸர்வதேசங்களிலுமுள்ள வஸ்து அவன் எங்குமுளன்; ஸம்ஸாரம் எப்படி எல்லையில் தீங்கோ அப்படி எல்லையில் நலமுடையவன் அவன். அந்நலமென்று அளவிடக்கூடாத குண விபூதி மஹிமைகளை உடையவன் என்று 'நேதி நேதி' ச்ருதிக்கும் அதற்குப் பொருளுரைக்கும் 'ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி' என்கிற ஸூத்ரத்திற்கும் பொருளுரைக்கிறார். "மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ" "அஸக்திரநபிஷ்வங்க: புத்ரதாரக்ருஹாதிஷு" "த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ...கத:" 'ஶாந்த உபாஸீத' 'நாஶாந்தோ நாஸமாஹித:' முதலிய ப்ரமாணங்களும் மற்ற விஷயப்பற்றுகளற்றே பகவானைப் பற்றவேண்டுமென்று நியமிக்கும் வசநங்களும் 'பற்றற்றே புல்கு' என்பதால் ஸூசிக்கப்படுகின்றன.

ஐந்தாம் பாட்டு

அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே.
(திருவாய்மொழி 1–2–5)

பகவத்பக்தியோகத்தை விவரிக்கையில் இதர விஷயங்களில் பற்றற்று என்று தேஹத்திலும் விஷயங்களிலும், தேஹாநுபந்திகளான பந்துக்களிடமும் ஸங்கமில்லாமையோடு தன்னுடைய ப்ரக்ருதி வியுக்தமான கேவலாத்மஸ்வரூபத்தின் 'வ்யதிரேகஸ்தத்பாவபாவித்வாத்' என்ற ஸூத்ரபடிக்கு ஸம்பாதிக்கவேண்டிய விஶுத்தஸாக்ஷாத்காரத்திற்காக ஸ்வஸ்வரூபநிரந்தரசிந்தநம் செய்யவேண்டுமென்றும் அதன் பலமான ஸ்வஸ்வரூபஸாக்ஷாத்காரம் ஸித்திக்கையில் அதனுடைய பரமாத்ம சேஷத்வமும் தெளிவாகப் ப்ரகாசிப்பதால் தனக்கு ஸர்வவிதபந்துவும் சேஷியும் ப்ராணனுமாயுள்ள பரமாத்மாவை ஸ்வஸ்வரூபவிசதஜ்ஞாநாநுபவங்களோடு உபாஸிக்கவேண்டுமென்று கீதையின் முதலிரண்டு ஷட்கங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளது. "அத்யாத்மயோகாதிகமேந தேவம் மத்வா தீரோ ஹர்ஷசோகௌ ஜஹாதி" என்று கடவல்லியும் ப்ரஜாபதிவாக்யத்தை சேஷமாயுடைய தஹரப்ரஹ்மோபாஸநவாக்யமும் விளக்கின. பக்தியோகத்திற்கு பூர்வாங்கமாகிய ஸ்வஸ்வரூப ஸாக்ஷாத்கார ஸம்பாதநத்தில் ஓர் பெரிய பக்தியோகவிக்நமான ஆபத்து வரக்கூடியதைப்பற்றி எச்சரிக்கவேண்டியது அவச்யமென்று இப்பாசுரத்தில் ஸூசனை. 'யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத:' என்று பகவான் ஸாதித்தபடி இது பெரிய ஸங்கலாபமாகத் தோன்றினாலும் அதற்குமேல்பட்ட நிரதிசயஸுகரூபமானப்ரஹ்மத்யாநப்ராப்திகளில் யத்நம் செய்யவேண்டும். கீதையின் முதல் ஷட்கத்தின் முடிவில் "யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேநாந்தராத்மநா। ச்ரத்தாவாந் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத:" என்று ஸ்வஸ்வரூபவிஷயமான யோகத்திற்கு மிகவும் மேற்பட்டது விச்வாத்மபகவத்விஷயமான யோகமென்று கூறப்பட்டது. மற்ற விஷயப்பற்றுகளற்று கேவலாத்மஸ்வரூபவிவேசநதர்சநாநுபவங்கள் ஸித்தித்து ஜராமரணமோக்ஷமாகிய விடுதலை என்னும் வீடு ஸித்தித்தாலும் அது ஹேயமான அபாயமே. உயிருக்கு ப்ராப்தமான சேஷிபதியின் நிரந்தரஸம்ச்லேஷமான நிரதிசயரஸத்தை இழக்கவேண்டிவரும். பேரிழவுவரும். 'வீடுபெற்று உய்ந்தது காண்' என்று திருப்பல்லாண்டில் வ்யஞ்ஜநம் செய்தபடி கேவலாத்மஸ்வரூபஸாக்ஷாத்காரம்பெற்று உயிர் அதோடு நின்றுவிட்டால் மரித்ததுபோலாகும். 3-ம் பாதத்

தில் புருஷவித்யாதிகரணத்தில் தைத்திரீயத்தில் 'தஸ்யைவம் விது³ஷ:' என்று தொடங்கிய புருஷவித்யையில் 'ப்³ரஹ்மணோ மஹிமாநமாப்நோதி' என்று ப்ரஹ்மத்தோடு பரமஸாம்யத்தால் ப்ரஹ்மத்தின் மஹிமையைப் பெறும் மோக்ஷபலத்தைக் கூறி இருந்தாலும், அதற்கு முன் அநுவாகத்தில் "ப்³ரஹ்மணஸ்த்வா மஹஸ ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத" என்று கூறப்பட்ட ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாகத்தான் இப்புருஷவித்யை கூறப்பட்டதென்றும் இங்கு கூறப்பட்ட ப்ரஹ்மமஹிமப்ராப்திருபமோக்ஷபலம் முன் கூறப்பட்ட அங்கியான ப்ரஹ்மவித்யையின் பலமென்றும் நிர்ணயிக்கப்பட்டதும் இப்பாசுரத்தால் ஸூசிதம். அப்படியே 'ஸாமாந்யாத்து பரிச்சேதாத் ஸ்வதிஷ்டாநஸாதிவத்' என்று 3-ம் பாதம் அந்தரத்வாதிகரணத்தில் ப்ருஹதாரண்யகம் உஷஸ்தப்ரச்நத்தில் யாஜ்ஞ்யவல்க்யர் கூறிய வித்யை தேஹாதிபூதக்ராமத்தின் உள்ளேயுள்ள உயிராகிய ப்ரத்யகாத்மாவின் த்யாவித்யைதானென்று பூர்வபக்ஷம் வந்து அதைத்தள்ளி உஷஸ்தகஹோளர் இருவருக்கும் உபதேசித்த வாக்யங்கள் ஏகவாக்யமாகச் சேர்த்தங்வயித்து ஒரே ப்ரஹ்மவித்யைதான் உபதேசிக்கப்பட்டது. முதல்வாக்யத்தில் ப்ரத்யகாத்மவித்யை உபதேசிக்கப்படவில்லையென்று நிர்ணயித்ததும் இதனால் ஸூசிதம். 'முதலிலே விஷயஸங்கத்தை விடும்போதே எம்பெருமானைப்பற்றிவிடுகிறார் என்று ஆறாயிரம். ஆச்ரயணகாலத்திலே சேஷியானவனைப்பற்றப்பாருங்கோள். அன்றியே விபத்தியை மாறுடி இறையைப்பற்றி இத்தை அறப்பார் என்னுதல்'மாற்பால் மனஞ்சுழிப்பமங்கையர்தோள்கைவிட்டு'என்னுமாப்போலே என்று ஈடு. அற்று என்கிற ல்யப்பை 'பற்று' என்கிறதிலேயும் 'பற்று' என்கிறதில் விதியை 'அற்று' என்கிறதிலேயும் மாறுடி இறைபற்றி பற்றறு' என்று அரும்பதம். "ஸாந்தோ தா³ந்த: உபரதஸ்திதிக்ஷு: ஸமாஹிதோ பூ⁴த்வா" என்ற ச்ருதியும் "ஸஹகார்யந்தரவிதி: பக்ஷேண த்ருதீயம் தத்³வதோ விஷ்யாதிவத்"[?] என்ற ஸூத்ரமும் ஸூசிதம்.

ஆறும் பாட்டு

பற்றிலனீசனும் முற்றவும் நின்றனன்
பற்றிலையாயவன் முற்றிலடங்கே.

(திருவாய்மொழி 1–2–6)

'வீடு' என்பதற்குப் பலபொருள்கள் உள்ளதுபோல 'பற்று' என்பதற்கும் ராகமாகிய ஸ்நேஹப்பற்று என்றும், பக்ஷபாதமென்றும், பற்றுகிறதென்கிற ஆச்ரயண க்ரியையும் பொருள்கள். எல்லாப்பொருள்களும் உசிதம் போல் கொள்ளவேணும். 'பற்றிலன்' என்பதற்கு'பற்று' என்னும் ஸ்நேஹத்திற்கு, 'இல்' வீடு, நிதியானவன், என்றும், பக்ஷபாதமில்லாதவனென்றும் இரண்டு பொருள்களையும் கொள்ளவேணும். 'அவன் எல்லாரிடமும் ஸ்நேஹஸ்வபாவனாய் இருக்கும்' என்று ஆறாயிரம். 'அவன் ஸங்கஸ்வபாவன் என்கிறார்' என்று ஈடு. ஈசனாயினுமவன் 'உனக்கு ஸகா, ஸ்நேஹிதன்' என்று உறவுசொல்லிக்கொண்டு உன் அருகே நித்யம் பிரியாமல் உன்னை ரக்ஷிப்பதிலேயே ஆசைகொண்டு ஹ்ருதய குஹையில் காத்து இருப்பதை குஹாச்ருதிகளும், அந்தர்யாமிச்ருதிகளும், 'ஸாயுஜ்யம் ஸ்ருஹீதயோ ஸதாயிநா'[?] என்கிற 4-மத்யாயம் 2-ம் பாதஸூத்ரமும் விளக்கின.

ஸ்ரீ:

எம்பெருமானாரின் ஸ்ரீஸூக்திகளும் ஸ்ரீதேசிகனும்

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனின் குணநுபவம் எப்படி எல்லோருக்கும் உத்தேச்யமோ அதுபோல் ஆசார்யனின் குணநுபவமும் எல்லோருக்கும் உத்தேச்யம். 'யதா தே³வே ததா² கு³ரௌ' என்றது உபநிஷத்து. இதை ஸ்ரீதேசிகனும் சிஷ்யக்ருத்யாதிகாரத்தில் 'பகவதநுபவம் போலே விலக்ஷணமான இவ்வநுபவத்தை ஜந்மபிக்ஷுவான இவனிழவாமைக்காகச்

சொல்லிற்றத்தனை' என்றருளியிருக்கிறார். ஆகையால் ஆசார்யர்களின் குணாநுபவம் ஆவச்யகம் என்றதாயிற்று.

ஆசார்யாநுபவம் என்பது பலருக்குப் பல ரீதியாக ஏற்படும். சிலர் ஆசார்யர்களின் ஜ்ஞாநாதிக்யத்தைப் பார்த்து அதற்குத் தோற்று அடிமைசெய்யப்புகுவார்கள்; சிலர் அவர்களின் அநுஷ்டாநத்தின் சீர்மையைக் கண்டு அதில் ஈடுபட்டு அவர்களுக்கு ஏவல் தேவை செய்வார்கள்; வேறு சிலர் அவர்களுடைய ஆத்மகுணபரிபூர்த்தியைப் பார்த்து தங்களை அவர்களுக்கு அறவிலை செய்துகொடுப்பார்கள்; மற்றும் சிலர் அவர்களின் ஸ்ரீஸூக்திகளின் காம்பீர்யத்தில் கால் தாழ்ந்து அவர்களுக்கு சேஷவ்ருத்தி செய்வார்கள். எம்பெருமானின் அநுபவம் எப்படி பலரைப் பலவிதமாகப் படுத்துமோ அதுபோல் ஆசார்யனுடைய அநுபவமும் பலரைப் பலபடியாகப் படுத்தும்.

ஸ்ரீதேசிகன் தனக்குப் பரமாசார்யரான ஸ்ரீபாஷ்யகாரரிடத்தில் முக்யமாக ஈடுபட்டு இழிந்த துறை யாதெனில்.—யதீச்வரருடைய ஸ்ரீஸூக்திகாம்பீர்யத்தில்தான் என்று சொல்லக் குறையில்லை. இவர் இழிந்த துறையானது யாத்ருச்சிகமாக யதிஸார்வபௌமரின் நியமநரூபமாயுமிருந்தது. ஸ்ரீபாஷ்யகாரர் திருநாட்டை அலங்கரிக்கும் தருவாயிலுள்ளபோது தன்னை ஆச்ரயித்த முதலிகள் (ஸ்வாமிகள்) அவ்வபாயம் தங்களுக்கு நேரிடப்போகும் ஸ்ரீபாஷ்யகாரரின் வியோகத்தை நினைத்துப் போர நொந்து திருவடிவாரத்தில் நிற்கும் போது அவர்களுக்கு இராமாநுஜன் நியமித்த ஐந்து உத்தரக்ருத்யங்களில் ப்ரதாநமானது ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தப்ரவசநமல்லவா?

ஸ்ரீதேசிகன் ஸ்ரீபாஷ்யகாரரை ஸ்தோத்ரம்பண்ண ஆரம்பிக்கும் ப்ரகாரத்தை உற்று நோக்கவேண்டும். நம்மாழ்வார் திருவாய்மொழி ஆரம்பிக்கும்போது எம்பெருமானின் ஸ்வரூப சேதநத்தை இரண்டாம் பாசுரத்தில்வைத்து தாம் ஆழங்கால்பட்டிழிந்த அவன் கல்யாண குணங்களின் கீர்த்தநத்தை 'உயர்வற உயர்நலமுடையவன் யவனவன்' என்று முதல் பாசுரத்தில் வைத்தாப்போலே இவரும் யதிராஜ ஸப்ததியில் எம்பெருமானாரின் திருமேனி வர்ணனையை 'உபவீதி-நகேயூரகாஞ்சநவதுழு' என்று உத்தரச்லோகத்தில் வைத்து பூர்வச்லோகத்தில் 'ப்ரவாயயதி யதூஸூக்திஃ' என்று யதீச்வரரின் ஸ்ரீஸூக்திகளை ஸ்தோத்ரம் செய்கிறார். எம்பெருமானாரின் ஸ்ரீஸூக்திகளில் ஸ்ரீதேசிகனுக்கு இவ்வளவு ஈடுபாடு ஏற்படக் காரணம் யாதென்று ஆராயப்புகுங்கால் இந்த திவ்யஸூக்திகளைக்கொண்டுதான் தாம் பரமத நிரஸநம் செய்தருளினபடியாலும், இவைகளை தமக்கு தாரக, போஷக, போக்யமாக அமைந்துள்ளபடியாலும், இவைகளின் சிரபரிசயத்தாலேதான் உபநிஷத்ப்ரதிபாத்யனை ஸ்ரீநிவாஸனைத் தாம் அநுபவிக்கநேரிட்டபடியாலும், இவைகளின் அப்யாஸத்தால்தான் தமக்குக் கீர்த்தி கிடைத்தபடியாலுந்தான் தமக்கு ஸ்ரீபாஷ்யகாரரின் திவ்யஸூக்திகளில் அதிகமான ஈடுபாடு ஏற்பட்டதென்று ஸ்ரீதேசிகன் அபிப்ராயமென்று சொல்லலாம்.

பரமதநிரஸநத்தைப்பற்றி அமுதனார் 'பண்டரு மாறன் பசுந்தமிழானந்தம் பாய்மதமாய் விண்டிட எங்களிராமநுசமுனிவேழம் மெய்ம்மை கொண்ட நல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே மண்டி வந்தேன்றது வாதியர்காள் உங்கள் வாழ்வற்றதே' என்கிறபடி இராமநுஜமுநியாகிற வேழம் நம்மாழ்வாரின் அமுதமொழிகளால் மதமேறியதாய் வேதமெனும் தண்டங்கொண்டு வாதியர்களின் வாழ்வை வேரறும்படி செய்ததென்கிறார். ஸ்ரீதேசிகனும் 'ஆரணநூல் வழிச் செவ்வை யழித்திடுமைதுகர்க்கோர் வாரணமாயவர் வாதக்கதலிகள் மாய்த்தபிரான் ஏரணி கீர்த்தி யிராமநுசமுனி யின்னுரைசேர் சீரணி சிந்தையினோம் சிந்தியோமினித் தீவினையே' என்கிறபடி மறையின்மார்க்கத்தை மாற்றிடும் மாயாவிகளின் வாதக்கதலிகளுக்கு ஓர் யானையாகத் தோன்றி அவைகளை மாய்த்த பரமோபகாரகரான எம்பெருமானாரின் அமுதம்போன்ற ஸ்ரீஸூக்திகளைப் பரிசயப்பண்ண பாக்யம் கிடைத்த நமக்கு எங்கே வரும் தீவினை என்கிறார். 'விஹைத்ருவஸூரதாசேஷஃ ஊபம

ஹூதஸிஷ்ருதி' என்கிறபடி மந்தமதிகளைக் கண்டு வேதமானது நடுங்குமளவில் யதீச்வர ஸரஸ்வதியானது வேதவாணியின் அளகபந்தத்திற்கு ஸைரந்த்ரியாகவிருந்து செவ்வனே அதை வாரிமுடிக்கிறது. பேதச்ருதிகளென்ன அபேதச்ருதிகளென்ன இவைகளை மட்டும் எடுத்துக் கயிறுதிரிக்காமல் கடகச்ருதிகளையும் எடுத்துக்கொண்டு மூன்றுகாலாக எடுத்து அழகாகப் பின்னலை முடிக்கிறதுகள் யதீச்வர ஸ்ரீஸூக்திகள் என்று 'ஊஒംவ்ருயஊஸം ஹவக' என்னும் ச்லோகத்தில் அருளிச்செய்கிறார்.

'பஜெ்ருசം' என்றாரம்பிக்கும் ச்லோகத்தில் யதிஸார்வபௌமரின் ஸ்ரீஸூக்திகளை நன்றாக அப்யாஸம் செய்தவனொருவனிடத்தில்தான் எதிரிகளின் கோலாஹலங்களெல்லாம் உடனே நாசத்தையடையும் என்கிறார். தொண்டரடிப்பொடியாழ்வார் 'நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே.........நின் நாமங்கற்ற ஆவலிப்புடைமை கண்டாய்' என்று யமனுடைய வாயிலில் அறைகூவினாப்போலே ஸ்ரீதேசிகனும் 'யதீஶ்வரஸரஸ்வதீ' என்றாரம்பிக்கும் ச்லோகத்தில் யதீச்வரருடை வாணியை அண்டைகொண்டபலத்தாலே இதரமதஸ்தர்களை அறைகூவுகிறார். இதனால் பகவந்நாம ப்ரபாவம்போல் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்தி ப்ரபாவமும் அளவிறந்தது என்று ஏற்படுகிறது. பட்டரும் 'திருநெடுந்தாண்டகம்கற்றிருக்கின்றோம்' என்றாரிறே.

'ஹ்ருதிஷ்ஹாதகஹாணாழ' என்னும் ச்லோகத்தில் அருளிச்செய்தபடி யதீச்வரருடைய ஸூக்திகளானது யுக்திகளுக்கு பர்யவஸாந பூமிபோலவும், ருக்வேதங்களுக்கு ஸமாநார்த்தபதம்போலும், யஜுர்வேதங்களுக்குஸ்தாநமாயும், ஸாமவேதங்களுக்கு அலங்காரம்போலும், அதர்வணவேதங்களுக்கு மூலதனம்போலும், தத்வங்களுக்கு தீபம்போலவும் ரிஷிகளின் வாக்குகளுக்கு ப்ரதிபிம்பம்போலுமிருக்கிறபடியால் இவைகளைச் சிரபரிசயம் பண்ணுமவர்களிடத்தில் எதிரிகள் பலாயனம்பண்ணுமது (ஓடுவது) ஓர் வியப்பில்லை. ஸ்ரீபாஷ்யத்தில் த்ருடமான ஜ்ஞாநமுள்ளவர்களுக்குத் தெளியாத மறைநிலமெல்லாம் தெளியுமென்பது ஸ்ரீதேசிகன் அபிப்ராயம். பெரியரஹஸ்யத்தில் சரமச்லோகாதிகாரத்தில் ப்ரபந்நனின் பாபங்களுக்குச் செலவு சொல்லும் ப்ரகரணத்தில் 'இந்த நிஷ்கர்ஷங்களெல்லாம் பாஷ்யத்திலே ஸத்ஸம்ப்ரதாயத்தோடேகூட சிரபரிசயம் பண்ணின மஹாப்ராஜ்ஞருக்கு நிலமாயிருக்கும்' என்று ஸாதிக்கிறபடி.

இதுகாறும் யதிஸார்வபௌமனுடைய திவ்யஸூக்திகளின் காம்பீர்யத்தைப் பார்த்தவுடனே எதிரிகள் பண்ணும்படியைச் சொன்னோம். இனி அந்த திவ்யஸூக்திகள் ஸ்வயம் புருஷார்த்தமாய் அநுபவிக்கலாம்படி யிருக்குமிருப்பைப்பற்றி சற்று வரைவோம். போகங்களை அநுபவிப்பது யௌவநத்திலே யாக லோகத்தில்காணநின்றோமிறே. ஸ்ரீதேசிகன் யௌவநம் முழுமையும், 'நிவிஷ்டം யதிஸாவஹ்ஸஉவஉஸாரஸ்ருதி ஹியஉவநழ' என்கிறபடி யதிஸார்வபௌமரின் வாக்குகளைக்கொண்டேயாயிற்றுச் சென்றது: 'த்ரிஂஶதாரஂஶ்ராவிதஶாரீரகஹாஷ்ய:' என்கிறபடி முப்பது தடவை ஸ்ரீபாஷ்யப்ரவசநம் செய்தார் ஸ்ரீதேசிகன் என்பது ஸுப்ரஸித்தம். இது ஸங்கல்பஸூர்யோதயத்தில் அருளியபடி. அதற்குப் பிறகு எத்தனை ஆவ்ருத்தியோ அறியோம். லோகத்தாருக்கு யௌவநம் விஷயாநுபவங்களின் ஆவ்ருத்தியினால் கழிக்கப்படும். ஸ்ரீதேசிகனுக்கு யௌவநம் ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீஸூக்திகளின் ரஸாநுபவத்தால் கழிக்கப்பட்டது. இந்த ஸ்ரீஸூக்திகள் தேசிகனுக்கு ஒவ்வொரு ஆவ்ருத்தியிலும் 'அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதம்' என்கிறபடி ஆராவமுதமாகவும் புதிதுபுதிதாகவும் தோன்றினபடி. மற்றோரிடத்தில் 'யதிவ்ருவரஹாரதீரஸஹ ரெண நீதം வய:' என்கிறபடி தன்னுடைய ஆயுள் முழுதும் யதிராஜருடைய வாக்குகளின் ரஸாநுபவத்தில் செலவழிந்தது என்கிறார். 'ஊளஉா: விவஹுவஹழ' என்றும் 'ஊதியதிராஜஉஹாநஸவ:பீஉஉவரீவாஹ வாஸிதாം விவத।விவாயவரிஷணிஷெவ்ராം வெஊா ஜொஊயநஸംவ்ருஊய ஸாயாழ' என்றும்

சொல்லுகிறபடி உபநிஷத் துக்தாப்திமத்யோத்ருதமாயும் கேவல ஸுதையைக்காட்டிலும் மிகவும் போக்யமாயும் ‘ஸ்ரோஷாயஷ்டிம் விஶ்ருதி ஶ்ராஹ்ய: ஸஹ்ருதய்யா ஹ்ருத்யவித்யா’ என்கிறபடி பண்டித ஸமூஹங்களினாலும் அநுபவிக்கக்கூடியதாயுமுள்ள இந்த ஸுதையை தினந்தோறும் அநுபவிக்கப்ராப்தம் என்றதாயிற்று.

இதரமதஸ்தர் ஒருவர் தன் பிள்ளையை நோக்கி ‘டேய்! போதுபோகவில்லை அந்த ஶாஸ்த்ர காதம்பரியை (ஸ்ரீராமாநுஜ பாஷ்யம்) எடு. சற்று போதுபோகும்படியாக அநுபவிப்போம்’ என்றாராம். ‘என்ன கோபுரம்! என்ன மண்டபம்! என்னப்ராஸாதம்! என்ன அழகாகப்பரமபதத்தை வர்ணிக்கிறார்!” என்று ஸ்ரீவைகுண்டகத்யத்தை ஸேவித்தவர் ஒருவர் பேசினாராம். இப்படி அநுபவரூபமாயுள்ளன ஸ்ரீபாஷ்யகாரரின் ஸ்ரீஸூக்திகள். இந்த ஸ்ரீபாஷ்யகாரரின் திவ்யஸூக்திபரிசயத்தினால்தான் தமக்கு எம்பெருமானை அடைய நேரிட்டது என்பது ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் ஹார்த்தமான அபிப்ராயம். யதிராஜ ஸப்ததியில் ‘ஶ்ருஜாஜேஶ’ என்று தொடங்கும் ச்லோகத்தில் தன்னுடைய மநீஷை என்கிற உத்தம நாயகியானவள் அப்புள்ளாருடைய உபதேசத்தால் யதிராஜருடைய ஸ்ரீஸூக்திகளாலே ஜாரபதிபோலான குத்ருஷ்டிகளை நிரஸித்து அந்த ஸ்ரீஸூக்திபலத்தாலே ‘ஶ்ருதிஶிரஸி விதீப்தே’ என்கிறபடி வேதாந்தஸவிஹாரஸாரதியை அநுபவிக்க ப்ராஸாதத்தில் ஏறுகிறான் என்கிறார். இப்படி எம்பெருமானையடைய எம்பெருமானுடைய திவ்யஸூக்திகள்தான் உபாயம் என்றதாயிற்று.

‘யச்சிஷ்வ்யாவிததீயஷ்டவஶிஷ்டதயியாஹ்ருஸ்யதாம் யதூணாநாவிரோதநிஷ்டம் ஸ்ருஷ்டஶநியதா கீர்த்திஸ் ஸ்ருஜாமதிஷ்டந:’ என்கிறபடி தமக்கு வந்த கீர்த்தியெல்லாம் ஸ்ரீபாஷ்யகாரரின் குணாதிசயங்களை அப்யாஸம் பண்ணினதால் வந்தது என்கிறார். உடையவரின் ஸ்ரீஸூக்திகளின் காம்பீர்யத்தில் தாம் ஆழங்கால்பட்டு இவரிடம் நேர ஶிஷ்யனாக ஆச்ரயிக்கப் பெறவில்லையே என்கிற குறை தீர ஸங்கல்பஸூர்யோதயத்தில் ஸ்ரீபாஷ்யகாரரை ஆசார்யராகவும் தம்மை ஶிஷ்யனாகவும் வைத்து நடிக்கிறார் என்பது திண்ணம். இப்படி ஸ்ரீபாஷ்யகாரரின் திவ்யஸூக்திகளில் ஸ்ரீ தேசிகனின் ஈடுபாடு வாசாமகோசரம்.

READ

“SRI NRISIMHAPRIYA”

HINDI MONTHLY JOURNAL

OF

SRI AHOBILA MUTT

Annual Subscription Rs **2**.

For copies apply to:—

The Manager,

“SRI NRISIMHAPRIYA”

SRI ACHARYA PITH,

BAREILLY (U. P.)

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸம்பாதகரின் குறிப்புகள்

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

நாமெல்லாரும் ஆஸ்திகர்கள். நித்யநைமித்திக கார்யங்களைச் செய்யவேண்டியது ஆவச்யகம் என்பதை உணர்ந்தவர்களே. பலர் அவைகளைச் செய்தும் வருகிறோம். அப்படிச்செய்து வரும்போது சில ஸமயங்களில் சில மாறுதல்களைக் காண்கிறோம். நாம் அக்கார்யங்களைச் செய்துகொண்டிருக்கும்போது அவைகளை நன்றாகச் செய்யத் தெரிந்துகொண்ட அந்தராத்மா ஒருவர் நம்முன்பு இருந்துவிட்டால் நாம் அக் கார்யங்களைச் செய்வதில் முக்யமான மாறுதல்கள் உண்டாகின்றன. நமக்குத் தெரிந்தமட்டில் எவ்வளவு ஜாக்கிரதையுடன் செய்யமுடியுமோ அவ்வளவு ஜாக்கிரதையுடன் செய்ய ஆரம்பிக்கிறோம். மற்றும் சில ஸமயங்களில் நாம் அக்கார்யங்களை அநுஷ்டிக்கும்போது நம்முடைய துரதிர்ஷ்டவசமாய் அம்மாதிரி கார்யங்களில் நம்பிக்கையோ சிரத்தையோ சிறிதுமில்லாதவர்களாயும் மற்ற அம்சங்களில் பெரிய மநுஷ்யர்களாயுமிருப்பவர்கள் நம் முன்னிலையில் இருக்கும்படி நேருகிறது. அப்போது நம்மில் சிலர் அக்கார்யங்களை ச்செய்வது வேறுவிதமாயிருக்கும். 'இன்னது செய்கிறோம், இப்படிச் செய்கிறோம்' என்று நமக்குக் கூடத் தெரியாமல் அதிசீக்கிரத்தில் அக்கார்யங்களை முடித்துக்கொண்டு அவர்களுடன் அவர்கள் வந்த கார்யங்களைப்பற்றிப் பேசப்போய்விடுகிறோம். சிலருக்கு அவர்களை அந்த ஸமயத்தில் பார்த்ததும் தாம் செய்துகொண்டுவரும் நித்யகர்மாநுஷ்டாநாதிகளில் லஜ்ஜைகூட உண்டாய்விடுகிறது, குற்றம்செய்யும்போது அகப்பட்டுக்கொண்டவனைப்போல் பலவிதமான 'சால்ஜாப்புகளைச்' சொல்லித் தப்பித்துக்கொள்ள விரும்புகிறோம். மற்றும் சிலர் 'நாம் பெரிய ஜ்ஞாநீ நல்ல அநுஷ்டாதா—என்று இவர்கள் நினைக்க வேண்டும்' என்ற எண்ணத்துடன் வழக்கத்திற்கதிகமாயுள்ள ஆடம்பரங்களுடன் அக்கார்யங்களைச் செய்யத்தொடங்குகிறோம். வெகு சிலரே இக்கார்யங்களை நாம் செய்வது நம்முன் இருந்துகொண்டு நாம் செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கும் மநுஷ்யர்களுக்காகவன்று' என்ற எண்ணமுடையவர்களாய் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கும் மநுஷ்யர்களுக்குத் தக்கபடியுள்ளமாறுபாடின்றி ஒரே ரீதியில் நித்யநைமித்திக கார்யங்களைச் செய்துவருகிறோம்.

ஒரே கார்யத்தைச் செய்துவருவதில் இப்படி மாறுபட்ட மனப்பான்மை நமக்கு என் இருந்துவருகிறதென்பதைப்பற்றி சிறிது சிந்தித்துப்பார்ப்பது நலம். நாம் யாருக்காக அக்கார்யங்களைச் செய்கிறோம்? நாம் அவைகளைச் செய்யும்போது கூட இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் மநுஷ்யர்களின் த்ருப்தியை உத்தேசித்துச் செய்கிறோமா? அல்லது நம்முடைய த்ருப்தியை உத்தேசித்துச் செய்கிறோமா? நம்முடைய த்ருப்தியை உத்தேசித்துச் செய்வதாயிருந்தால் நாம் செய்வதை யார் பார்த்துக்கொண்டிருந்தாலும் எவ்வளவு தோஷம் சொன்னாலும் நாம் கவலைப்படவேண்டியதில்லை. 'என் ப்ரீதிக்காகச் செய்யும் கார்யத்தை என்னிஷ்டப்படி செய்துகொள்ளுகிறேன். நீர் யார் கேட்க'? என்று அவர்களைத் தாராளமாகக் கேட்டுவிடலாம். எதிரிலிருக்கும் மநுஷ்யர்களின் அபிப்ராயத்துக்குத் தக்கபடி சுருக்கியும் பெருக்கியும் பலர் கார்யங்களைச் செய்துவருவதால் நம்மைவிட வேறுபட்ட ஒருவருக்காகவே இக்கார்யங்களைச் செய்கிறோமென்று நாம் நினைப்பதாக எண்ண வேண்டியிருக்கிறது. அப்படி வேறுபட்டவர் யார்? உலகத்தவர்களா? நாம் கார்யங்களை

ஆரம்பிக்கும் முன் என்ன சொல்லிக்கொண்டு ஆரம்பிக்கிறோமென்று பார்ப்போம். 'ஸ்ரீபகவதாஜ்ஞயா ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம்' என்று ஒவ்வொரு வைதிக கார்யாரம்பத்திலும் ஸங்கல்பம் செய்துகொண்டு ஆரம்பிக்கிறோம். அதாவது 'இந்தக்கார்யம் செய்ய வேண்டுமென்று பகவான் ஆஜ்ஞாபித்திருப்பதால் அப்படி ஆஜ்ஞாபித்த பகவானுன ஸ்ரீமந் நாராயணனுடைய ப்ரீதிக்காக இந்தக்கார்யத்தைச் செய்ய ஆரம்பிக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு ஆரம்பிக்கிறோம். 'ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் என்னுடைய ஆஜ்ஞை' என்று பகவான் சொல்லியிருப்பதால் அந்த ச்ருதி ஸ்ம்ருதிகளில் நாம் அவச்யம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்ட கார்யங்கள் ஸ்ரீமந் நாராயணனுன அந்த பகவானுலேயே நியமிக்கப்பட்ட கார்யங்கள். அவைகளை அவன் சொல்லியபடி நாம் செய்தால் அவன் திருவுள்ளமுகக்கும். அதுவே நமக்குப் புருஷார்த்தம். அவைகளெல்லாம் அவனுக்கு ஆராதநம். அவைகளை அவனுக்காகச் செய்கிறோமேயொழிய உலகத்துக்காவன்று' என்ற எண்ணம் வேண்டும். இந்த எண்ணம் ஸ்திரமாயிருந்தால் உலகத்தாரின் வெறுப்பு விருப்புகளைப் பார்த்து அவைகளுக்குத் தக்கபடி நம் கார்யங்களில் மாறுபாடு தோன்றுது. ஸர்வேச்வரனுடைய ப்ரீதியொன்றையே நோக்காகக்கொண்டு நம் கார்யங்கள் நடந்துவரும்.

'என்னுடைய ஆஜ்ஞையின்படி நடந்தால் எனக்கு ப்ரீதிபுண்டாகும்; மீறி நடந்தால் என்னுடைய கோபத்திற்காளாகவேண்டிவரும் என்று சொல்லிவிட்டு ஸர்வேச்வரன் வாளாயிருந்துவிடவில்லை. அப்படி நடக்கிறார்களா என்று வேவு பார்ப்பதற்கு வேண்டிய கார்யங்களையும் செய்துவைத்தான். ராஜாங்கத்தில் சட்டதிட்டங்களை ஜநங்கள் சரியாகப் பின்பற்றுகிறார்களா என்றுபார்ப்பதற்கு போலீஸ்காரர்களை நியமித்திருக்கிறார்கள். ஒருவன் சட்டங்களை மீறி நடந்துவிட்டால் ஒருக்கால் போலீஸ்காரர்களை தன்வசப்படுத்திக்கொண்டு தன் குற்றத்தை மறைத்துவிட்டு தண்டனைக்குசப்படாமல் தப்பித்துக்கொள்ள வழியுண்டு. ஸர்வேச்வரனுடைய அரசாங்கத்தில் அம்மாதிரி நடக்கமுடியாதபடி ஸர்வஜ்ஞனை அவனே ஒவ்வொருவரிடத்திலும் அந்தர்யாமியாயும் இருந்துவிட்டான். அவனை எப்படி ஏமாற்ற முடியும்? நாம் நெஞ்சாலும், வாயாலும் செய்கையாலும் செய்யும் ஒவ்வொரு கார்யத்தையும் அவன் கூடவே இருந்து கண்காணித்து வருகிறான். எனவே அவனை ஏமாற்றிவிட முடியாது. இவ்வர்த்தத்தை:-

'உள்ளத்தேயுறையும் மாலை யுள்ளுவானுணர்வொனறில்லாக்
கள்ளத்தேனனும் தொண்டாய் தொண்டுக்கே கோலம்பூண்டு
உள்ளுவா ருள்ளிற்றெல்லா முடனிருந்தறிதியென்று
வெள்கிப்போ யென்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே'

(திருமாலை–34)

என்ற பாசுரத்தில் தொண்டரடிப்பொடியாழ்வார் வெகு அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

ஒரு ஸாமான்ய சேதநன் தன்பக்கத்திலிருப்பதாகத் தெரிந்தால் தனிமையில்போலில்லாமல் சொஞ்சம் ஜாக்ரதையுடன் கார்யங்களைச்செய்வது மனுஷ்யஸ்பாவம். 'ஸர்வஜ்ஞனுயும், ஸர்வசக்தனுயுமுள்ள ஸர்வேச்வரன் நம்முடனேயேஇருந்து நம்முடைய ஸகலகார்யங்களையும் நன்கு கண்காணித்துவருகிறான்' என்று ஒருவன் உணர்ந்திருக்கிறானு இல்லையா என்பதை அவன்செய்யும் கார்யங்களைப் பார்த்தே எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

* * *

சாஸ்த்ராநுபந்தம்

இந்த ஸம்புடத்தின் ஆரம்பத்தில் சாஸ்த்ராநுபந்தமென்ற தனிப்பகுதி,அது வேண்டிக் கேட்போருக்குமட்டும் அனுப்பப்படுமென்று எழுதியிருந்தோம். இப்பால்நமக்குவாசகபஹாசயர் களிடமிரிந்து வரும்கடிதங்களால் அநேகமாக எல்லாருக்குமே சாஸ்த்ராநுபந்தம் வேணுமென்று அபேக்ஷையிருப்பதாக எண்ண வேண்டியிருக்கிறது. எனவே இனி எல்லா சந்தார் களுக்கும் சாஸ்த்ராநுபந்தமும் சேர்த்து அனுப்பப்படும்.

* * *

சந்தா வரவு

அடுத்த மாஸம் முதல் சந்தாதாரர்களுக்கு அவர்கள் அவ்வப்போது செலுத்தும் சந்தாவுக்கு தனிபாக ரசீது அனுப்பப்படும். ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் சந்தாவரவு பிரசுரிக்கப்படுவது நிறுத்தப்படும். இந்த ஏற்பாட்டினால் ஸஞ்சிகையில் வ்யாஸங்கள் அச்சிடுவதற்கு இன்னும் கொஞ்சம் இடம் கிடைக்குமாதலால் இதைச் சந்தாதார்கள் ஸந்தோஷத்துடன் அங்கீகரிப்பார்களென்றே நம்புகிறோம்.

ஸ்ரீ:

ஸத்க்ருத்யம்

வந்தே ஸ்ரீரங்கராஜ்ஞ்யதிந்த்ரம் ததுபாவநிஷ
வீரராகவதாஸிஜாதயத்யீசம் ச ஸம்ப்ரதாய
வீரராகவதாஸிஜாத யத்யீடேசிகாஜ்ஞயா ।
ஸத்க்ருத்யம் கூர்யாதேவம் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரி-
யாக்யகே ॥

ஸத்க்ருத்யம் என்றால் முதலில் நல்லகார்யம் என்று தோன்றலாம். அந்த பதத்தை உள் புகுந்து ஆராய்ந்தால் பல விசேஷார்த்தங்களைக் காணலாம். அவைகளில் சில அர்த்தங்களைத் தெரியப்படுத்துகிறேன்.

'ஸத்' என்று பகவானுக்கும் பெயர். அவனுடைய க்ருத்யம் என்றால் அவன் பண்ணுகிற வ்யாபாரங்கள் என்றும் பொருள் உரைக்கலாம்.

உபநிஷத்துகளில் 'ஸத்' என்றும் 'ப்ரஹ்ம' என்றும் பொதுவாகச் சொல்லி நாராயணன் என்று எல்லாரும் நன்றாக அறியும்படி விசேஷித்தவனை உள்ளபடி அறிந்திருப்பவன் ஸத் எனப்படுவான். அவனுடைய அறிவின் தெளிவும், தெளிவினால் ஏற்படும் பயனும், பயனை அடையும் வழிகளும் உபநிஷத்துகளில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஸத்க்ருத்யம் என்றால் பகவானைத் தெரிந்துகொள்வதும், அடைவதும் எனப்படும். இம்மாதிரி பல அர்த்தங்களில் ஸத்க்ருத்யம் என்பதற்கு சிறந்தது எந்த அர்த்தம் என்று விசாரிக்க விமையும். அந்த மனிதன் பகவானை தன்னைக் காட்டிலும் வேறாகவும், மேல்பட்டவனாகவும் தன்னை அடக்கி ஆளுகிறவனாகவும், தன்னை விட்டுப் பிரியாதவனாகவும், தன் சரீரத்தையும் தன் இந்த்ரியங்களையும் தன்னிஷ்டப்படி செய்துகொள்ள அவன் ஸங்கல்பமே மூலகாரணமென்று நிச்சயமுள்ளவனாகவும், தன்னிடத்தில் போலவே எல்லா பதார்த்தங்களிலும் இருக்கும் பெருமையை உள்ளவன் என்பதையும் நினைத்து தன்னுடைய தாழ்மையையும் ஸ்வாபாவிகமான நிலைமையில் தான் இல்லை என்றறிந்து ஸ்வாபாவிகமான அந்த நிலைமையையடைய சாஸ்த்ரங்களில் தனக்கு வகுத்து விதித்ததான சரணாகதி என்னும் உபாயத்தைச் செய்தவனே, அவன் இங்கிருக்கும் காலத்தில் தினந்தோறும் சாஸ்த்ரங்களால் அவச்யம் செய்யவேண்டியதென்று நியமிக்க கார்யங்களைச் செய்து மற்ற காலங்களில் விலக்ஷணமாகச் செய்யும் கார்யவிசேஷத்தை ஸத்க்ருத்யம் என்கிறது. இதையே ஸ்ரீதேசிகன் 'ஸசேஷாயுஷ்' என்கிற ச்லோகத்தில் உத்தரார்த்தத்தில் 'சுத்தாவுந்து குருவமேவி தாம வ்ருத்திம்' என்று ஸாதித்திருக்கிறார். இந்தமாதிரியான வ்யாபாரத்தின் விசேஷத்தை மூன்று காணங்களாலும் செய்யவேண்டும் ப்ரகாரத்தைப் பிரியச் சொல்லுமிடத்தில் இவனுக்கு கைங்கர்யரூபமான புருஷார்த்த ஸமுத்ரம் வற்றுதல் வரை இடுதல் செய்யாவிருக்கைக்கு செய்யவேண்டுமது ஆசார்யாதி பாகவதகைங்கர்யம் என்று தீர்மானித்திருக்கிறார்.' ஆக ஸத்க்ருத்யமென்பது பெருமாள் முதற்கொண்டு தன் ஆசார்யன், ஆசார்யனை யடையவழிகாட்டின பாகவதர்கள் வரையிலும் தன் சக்திக்கநுகுணமாக ப்ரீதிரூபமாகச் செய்யும் கார்யவிசேஷமென்றதாயிற்று.

இவ்விடத்தில் ஆசார்ய பதம் தன் ஆசார்யனுக்கு ஆசார்யர்களையும் அவர்களுக்கு ஆசார்யர்களையும் 'குருப்ய: தத்குருப்யச்ச' என்கிற ச்லோகத்தின்படி தெரியப்படுத்துகிறது. ஆக பராசார்யர்களுடைய கைங்கர்யமும்

பண்ணவேண்டிற்றாயிற்று.

இக்கைங்கர்யங்கள் மூன்று கரணங்களாலும் செய்யக்கூடியவைகள். அதாவது:-மனத்தினால் ஆசார்யாதிகள் செய்தவற்றையும் அவர்களுடைய ரூபகுணங்களையும் மறக்காமல் எண்ணி, வாக்கினால் பிறர் அறியும்படி சொல்லி, காயத்தினால் நமஸ்காரங்களை பின்புள்ளாருமறிந்து உஜ்ஜீவிக்கும்படி க்ரந்தங்கள் எழுதிப் ப்ரகாசப்படுத்துவது.

இம்மாதிரி தன் ஆசார்யாதிகள் உபகரித்த விஷயத்தை தெரியப்படுத்தினவர்கள் நம்மாழ்வார் மதுரகவியாழ்வார் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் போன்றவர்கள்.

இவர்களில் நம்மாழ்வார் தான் அநுபவித்து உபதேசித்த ப்ரகாரத்தை 'ஒத்தார் மிக்காரை' என்கிற பாசுரத்தில் அநுபவிக்கலாம். அத்தா நீ செய்தன அடியேன் அறியேனே என்று. மதுரகவியாழ்வாரின் அநுபவத்தையும் உபகாரத்தையும் கண்ணிநுண்சிறுத்தாம்பு என்கிற ப்ரபந்தத்தில் விசதமாக அநுபவிக்கலாம்.

ஸ்ரீதேசிகனும் பரமாசார்யனான ஸ்ரீபாஷ்யகாரர் விஷயமாக விசேஷமாக அநுபவித்தார். ஸ்ரீபாஷ்யகாரர் அவதரிக்காமல்போனால் நாரணனென்று அறிவார் இல்லையாகவே போய் விடுமல்லவா லோகம். அதைக்கொண்டு ஸ்ரீபாஷ்யகாரரை விசேஷமாக ஸ்தோத்ரம் பண்ணி யதிராஜஸப்ததியால் ஜகத்துக்கு உபகரித்தார்.

இம்மாதிரி ஜகத்திற்கு உபகரித்த ஆசார்யர் பலரிருக்க நம் அழகியசிங்கர்களில் 37-வது பட்டம் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் பண்ணின உபகாரம் மிகவும் கொண்டாடத் தகுந்தது. அதாவது:-பெருமாள் முதற்கொண்டு தன் ஆசார்யன் வரையிலும் ஜகத்திற்கு ஏற்பட்ட உபகாரங்களைப் பலபடி அநுபவித்திருந்தாலும் ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன் ஜகத்திற்குப் பண்ணின உபகார விசேஷத்தை தான் அநுபவித்து அப்படியே எல்லோரையும் 'வைபசந்த்ரிகை' என்கிற க்ரந்தத்தை எழுதி அநுபவிப்பித்ததே. அதற்கு என்ன காரணம் என்றால் அந்த ஆதிவண் ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் தான் எழுந்தருளியிருந்த காலத்தில் அநுஷ்டித்துச் செய்து வைத்தும்போன விலக்ஷணமான கார்ய விசேஷங்கள். அவையாவன: ஸர்வேச்வரன் ஆழ்வார்கள் பாஷ்யகாரர் தேசிகன் முதலியவர்கள் ஜகத்திற்கு பண்ணின உபகாரங்களை நினைத்து அந்த உபகாரங்கள் ஸார்த்தமாவதின் பொருட்டு நேராகவும் பிற்காலத்திலும் எல்லாரும் அநுபவிக்கும்படிக்கும் பண்ணினவைகள்.

இவைகளை அநுஸந்தித்து 'ஶ்ரீராம வ்ருகா-ஶ்பெசு, என்று குருபக்தியில் ஆதிக்யத்தின் போக்குவீடாக பிள்ளைப்பாக்கம் ஸ்ரீ அழகிய சிங்கர் 'வைபவ சந்த்ரிகை' பண்ணினது. அதன் முதல் ச்லோகத்தை யதாமதி அநுபவிக்கப் ப்ராப்தமாகிறது. இந்த ச்லோகத்தின் பெருமை 'நிஶ்ஶேஷஶைலரதமு' என்கிற ச்லோகத்திற்கு விஷயமானாலும் அதாவது:-பாதுகையின் மஹிமையானது ஆகாசம் முழுவதும் காகிதமாகவும், எழு ஸமுத்ரங்களும் மையாகவும், ஆயிரம் முகமுள்ள ஆதிசேஷன் தானே சொல்லுவானேயானால் ஒருகால் எழுதப்படலாமென்று கருத்து. அடியேன், 'ஶ்ராஸீஷா காஶ஼ ஹவத ஶராவிகா-ஹ்ஶமவதி தரெஷா கிஶெ௵தா ஶத வ-வதி ஶதாவரஹிதஃ' [கங்காப்ரவாஹத்தை நாய் தன் நாக்கினால் நக்கினாலும் கங்கைக்கு ஏதாவது தோஷம் ஏற்படுமா? அதன் பெருமைக்கு ஒரு குறைச்சலுமில்லை. நாய் தாஹம் தீர்ந்ததாக ஆகிறதல்லவா?] என்கிறபடியே அநுபவித்தால் அந்த ச்லோகத்தின் பெருமைக்கு ஒரு தோஷமும் ஏற்படாது. எனக்கும் தாபம் தீர்ந்து த்ருப்தியும் ஏற்படும் என்று எண்ணியே அநுபவிக்கிறேன்.

ஸ்ரீஶைலஸிம்ஹ 'கா...ஶா...யா...' தாரூதழ । ஶ்ரீவண்ஶடகொவாவ்ருபொமி வெலவரஹஸெ ॥' ஸ்ரீமாதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் தான் எழுந்தருளியிருக்கும் ஸமயத்தில் செய்தகார்யங்கள் ஒவ்வொன்றும் அர்புதம்போலிருக்கிறது.

(தொடரும்)

ஸ்ரீ:

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

உபாயத்வம்

(சென்ற அநுபந்தத்தின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

இவ்வுண்மையைப்பராமர்சியாது சிலர் முன் க்ரந்தங்களில் நிரூபிக்கப்பட்ட விஷயங்களையே ஸ்தாபிக்க ஆக்ரஹப்பட்டதைப் பார்த்து தேசிகன் ஸ்ரீரங்கநாதனுடைய கடாக்ஷவிசேஷ பலத்தால் ப்ராமாணிகமாக அர்த்தங்களை நிரூபிக்கும்போது இப்படி நம்மவர் சிலர் இருக்கவேணுமோ என்று விஷண்ணராய் அவர்களை ப்ரதிபோதனம் செய்ய விரும்பி, பன்னிரண்டு வயதாகியும் உபநயனமில்லாமலே நின்ற தனது குமாரன் ச்வேதகேதுவைப் பார்த்து,

'न वै सोम्यास्मत्कुलीनोऽननूच्य
ब्रह्मबन्धुरिव भवति'

[அப்பா, நம் குலத்திலுதித்தவன் அத்யயநம் செய்யாமல் ப்ராஹ்மணபாஸன்போல இருப்பதில்லை]

என்று அவன் பிதா சொன்னதுபோல ம்ருது ஸ்வபாவத்தைச் சிறிது விட்டு, 'ஸுஹ்ருதே— என் பிடிக்கவில்லை?' என்றொரு கேள்விகேட்டு, 'இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே ப்ராமாணிகார்த்தங்கள் தோற்றச் செய்தே பற்றினது விடாதொழியில்' என்று அபிநிவேசத்தை அநுவதித்து, அதனால் உண்டாகக்கூடிய துர்தசையை '[illegible]' என்று தொடக்கமான ஆப்தவசநத்தாலே காட்டியருளினர்.

'वज्रादपि कठोराणि मृदूनि कुसुमादपि
लोकोत्तराणां चेतांसि'

[உலகத்தைக் கடந்து நிற்கும் பெரியோர்களின் மனது வஜ்ரத்தைக்காட்டிலும் கடினம். புஷ்பத்தைக்காட்டிலும் ம்ருது.]

என்றபடி ஸ்வஜநம் வழிதப்பி நடக்கும்போது முனிவைக் காட்டியாவது திருத்தவேண்டிய கடமை பெரியோர்களுக்குளது. விசேஷித்து ஆசார்யஸ்தானத்தில் இருப்பவர்களுக்கு. இப்படியும் சிலர் திருந்தினர்களில்லை. நிதர்சநமாக யதீந்த்ரப்ரவணப்ரபாவம் பிள்ளைலோகம் ஜீயர் நிரூபணத்தைப் பராமர்சிப்போம்.

'கீழ்ச்சொன்ன 'வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்' 'ईशैषा सर्वभूतानाम्' 'संसारार्णवतारिणीम्' இத்யாதி மஹர்ஷிவசநங்களையும் '[illegible]' இத்யாதி பகவத்வசநங்களையும் கண்டு சிலர் ப்ரமித்து லக்ஷ்மிக்கு உபாயத்வமுண்டாக நிச்சயித்து அநர்த்தப்பட யோக்யதையுண்டாகையாலே அவர்களுடைய ப்ரமநிவ்ருத்யர்த்தமாக அந்த லக்ஷ்மீபதியான தானே 'அவளுக்குப் புருஷகாரத்வமேயுள்ளது. உபாயத்வமில்லை' என்று நிர்ணயித்து: இந்த நிர்ணயம் வேதாந்தாதி ஸச்சாஸ்த்ரங்களுக்கும் எனக்கும் லக்ஷ்மிக்கும், ப்ரமாதாக்களுமாய் மச்சந்தாநுவர்த்திகளுமான ஸேநேச ஸ்ரீசடஜிதாதி நித்யர் முக்தர் முமுக்ஷுக்களுக்கும் ஸ்ரீவால்மீகி ப்ரமுகரான மஹர்ஷிகளுக்கும் அத்யந்தாபிமதமென்றிப்படியருளிச்செய்தவிது.'

'ईशप्रवृत्तिं प्रति जन्तूनां संसारे पततामयः । लक्ष्मीः पुरुषकारत्वे निर्दिष्टा परमर्षिभिः ॥ ममापि च मतं ह्येतन्नान्यथा लक्षणं भवेत्' என்கிற ஸ்ரீபாஞ்சராத்ரமஹாசாஸ்த்ரோக்தமான அந்த ஸ்ரீஸூக்தியாலே வ்யக்தம். இன்னமும்

'[illegible] लक्ष्मीं पुरुषकारेण व्रजतो [illegible]'

தே ஸாஜேவா நந்த்யோ ஸாரஸா: ||'

இத்யாதி பகவத்வசநோக்தாநுஷ்டாநமுடையவர்களை பாச்யாதிகர்களாகவும் ப்ரீதமாநஸராகவும் க்ருதார்த்தராகவும் அந்த லக்ஷ்மீபதிதானே அருளிச்செய்யுமத்தாலே தத்வ்யதிரேகத்தில் கர்ப்பநிர்ப்பாக்யராகவும் ஜநநமரணாதிதுக்கிதராகவும் ஸம்ஸார ஸாகரநிமக்நராகவும் இப்படி லக்ஷ்மிக்கு உபாயத்வமுண்டாமென்னுமவர்களைச்சொல்லுமது ஸுஸ்பஷ்டம்.

ஆனால் 'நாந்யயா லக்ஷணம் பவேத்' என்ற ஸாமாந்யவசநமானது 'வினை தீர்க்கும்', 'ஹரிம் த்ராதாரம்', 'ஸம்ஸாரார்ணவ தாரிணீம்' இத்யாதி ப்ரமாண ப்ரஸித்தமான ததுபாயத்வலக்ஷணத்துக்கு பாதகமாம்படி எங்ஙனே என்னில் ....விசேஷித்து 'லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா' என்று புருஷகாரத்வத்தை அவளுக்கு லக்ஷணமாக அங்கீகரித்து 'நாந்யயா லக்ஷணம் பவேத்' என்னுமத்தாலே அவளுக்கு உபாயத்வம் லக்ஷணமன்றென்று இப்படி அந்த லக்ஷ்மீபதிதானே வ்யவஸ்தை பண்ணியருளுகையாலே அதுக்கது பாதகமாகக் குறையில்லையாயிற்று.

இனித்தான் உபாயத்வலக்ஷணமாவது ஆச்ரிதனுடைய அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்குமதுவாயிற்று. இவை இரண்டும் 'வினை தீர்க்கும், ஹரிம் த்ராதாரம்' இத்யாதிகளாலே பிராட்டிக்குமுண்டாகச் சொல்லியிருந்தது. அந்த அநிஷ்டநிவாரணாதிகளை ஸ்வதந்த்ரையாய்த் தானே பண்ணுவளோ ஸர்வேச்வரனுக்கு விண்ணப்பம் செய்து அவனைக்கொண்டுபண்ணுவளோவென்னில், தன்னுடைய புருஷகாரபலத்தாலே அவனைக்கொண்டு பண்ணுவிப்பள் என்னுமது 'விதேவ ஸுதஸ்யேவ ஜநநீ......' இத்யாத்யாசார்யஸூக்திகளோடே சேர்ந்திருக்கும்.

ஆனால் அந்த உபாயத்வ லக்ஷணமான அநிஷ்டநிவாரணமும் இஷ்டப்ராப்தியும் பெரிய பிராட்டியார் தாமே பண்ணுவரென்னுமது ஏதத்தர்சனோத்தாரகரான ஸ்வாமி நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகளிலே ஸுப்ரஸித்தம். எங்ஙனேயென்னில் 'வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்' என்கிற பாட்டின் வ்யாக்யாநத்திலே நிகமநத்தில் இத் திருவாய்மொழி கற்றாரைப் பெரியபிராட்டியார் தமக்கே பரமாகக்கொண்டு ஸமஸ்த துக்கங்களையும் போக்குமவள் என்கிறார்.........' என்றும் இப்படி தத்வ்யாக்யாதாவான ஸ்வாமி நம்பிள்ளை அருளிச்செய்திருக்குமத்தாலே பிராட்டிக்குமுபாயத்வமுண்டென்னுமது ஸித்தமாயிருக்க அத்தை 'நாந்யயா லக்ஷணம் பவேத்' என்னுமத்தாலே கழிக்கக்கூடுமோ வென்னில் கூடும்.'

ஆகையால் தத்ஸம்மதமான தத்புருஷகாரத்வமே அந்த லக்ஷ்மிக்கும் தத்பதிக்கும் ஸ்ரீசடஜிதாத்யாசார்யர்களுக்கும் ஸ்ரீவால்மீக்யாதி மஹர்ஷிகளுக்கும் ஸம்மதமென்னுமது,

'லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி: | மமாபி ச மதம் ஹ்யேதந்நாந்யதா லக்ஷணம் பவேத் ||'

என்கிற ஸ்ரீபாஞ்சராத்ர மஹாசாஸ்த்ரோக்த ஸ்ரீஸூக்தியாலே ஸுவ்யக்தமாயிருக்கச் செய்தே அதின்படியே தத்புருஷகாரத்வஸ்தாபகரான ஸ்ரீஶம்ஜ்ஞாயாஸ்ஸ்ரயதி வரகஸூரிஸௌரிவிருத்தாயவேஷாஹி ஜகதாசார்யர்கள் பெரியவாச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்கள் லக்ஷ்மிக்கு உபாயத்வமில்லை என்னுமத்தை ...... ஸஹியாமல்......தூஷணங்களை எழுதுமத்தாலே... சடஜிதாத்யாசார்களை தூஷித்ததாகத் தலைக்கட்டுகையாலே ...... அவர்களுக்கு முடிவில்லாத நரகாநுபவமே ஸித்தம்......'

என்றிப்படி அவர் ப்ரதிபாதிக்கின்றார். இதில் கவனிக்கவேண்டிய அம்சங்கள் இவை.

(1) 'வினை தீர்க்கும், ஹரிம் த்ராதாரம், ஸம்ஸாரார்ணவ தாரிணீம்' இத்யாதி ப்ரமாணஸித்தமான ததுபாயத்வலக்ஷ

ணத்துக்கு ...... பாதகமாகக் குறையில்லையாயிற்று' என்றும் 'ஸ்வாமி நம்பிள்ளை தாமே யருளிச்செய்திருக்குமத்தாலே பிராட்டிக்கு முபாயத்வமுண்டென்னுமது ஸித்தமாயிருக்க 'நாநுயா லக்ஷணஹவெஸ' என்னுமத்தாலே கழிக்கக் கூடுமோவென்னில் கூடும்' என்றும் இவர் ஸ்வயம் ஆழ்வார் வால்மீகி முதல் நம்பிள்ளை வரையில் உள்ள ஸர்வ ஆப்தர்களுடைய ஸ்ரீஸூக்திகளையும் பாதிதமாக ஸ்பஷ்டமாய்சொல்லிவிட்டு அவர்கள்பிராட்டிக்கு உபாயத்வமில்லையென்றுசொல்லியிருப்பதாகவும் தேசிகன் அவர்களை தூஷிப்பதாகவும் ஸாக்ஷாத் விபரீதமாய்ப் பேசுகின்றார்.

(2) வஸ்துவ்ருத்தியில்தேசிகன்ஸாதித்திருப்பதையேதான் இவர் ப்ரதிபாதிக்கின்றார். 'உபாயத்வலக்ஷணமாவது ஆச்ரிதனுடைய அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்குமதாயிற்று. இவை இரண்டும் வினைதீர்க்கும் வஸிதூதஷு இத்யாதிகளாலே பிராட்டிக்குமுண்டாகச் சொல்லியிருந்தது. அந்த அநிஷ்ட நிவாரணாதிகளை ... அவனைக்கொண்டு பண்ணுவிப்பன்' என்கிறார் இவர். இதைத்தான் தேசிகன் 'உபயோக விசேஷங்களை ஸஹ்ருதயர் அறிந்து கொள்வது' என்று ஸாமாந்யமாகவும் 'ஸம்லக்ஷணநாஹ,ஹெ' என்று விசேஷித்தும் ஸாதித்தார். இதை க்ரஹிக்காமலே இவர் தேசிகனை நிந்திக்கிறார்.

(3) எம்பெருமான் தண்டதரத்வத்தை விட்டு அபிகந்தவ்யனாகைக்காக பிராட்டியை புருஷகாரமாக வரித்து இவனிடத்தில் பண்ணும் ப்ரபத்தி வேறு. இது தரும் பலத்தைச் சொல்லவந்தது 'விதெவ கவச வெயாநு' என்கிற ச்லோகம். விரும்பிய புருஷார்த்த ஸித்திக்காக எம்பெருமானிடத்தில் பண்ணும் ப்ரபத்தி வேறு. இதிலும் பிராட்டி எம்பெருமானுக்கு விசேஷணமாய் நின்று உத்தேச்யையாகிறாள். பிறகு எம்பெருமான் செய்யும் அநுக்ரஹவிஷயத்தில் யதோசிதம் ப்ரவ்ருத்திக்கின்றாள். இதைப்பற்றிவந்தது 'வினைதீர்க்கும்' 'ஸம்ஸாராணவதாரிணி' இத்யாதி. இப்படி விபக்தமாய் ஸ்ரீஸூக்திகளிருக்க இவர் வ்யாமிச்ரமாக்கிப் பேசுகிறார்.

(4) இப்படி எம்பெருமான் பண்ணும் அநுக்ரஹத்தில் பிராட்டிக்கு ஸம்பந்தமுண்டு என்ற இவர் அப்போது பிராட்டிக்கு வ்யாபாரமே இல்லை என்கிற பெரியவாச்சான்பிள்ளையின் திருவுள்ளத்தையநுஸரித்தவரல்லர். அவரையும் கண்டித்தவராகவே ஆகின்றார்.

(5) அநுக்ரஹகாலத்தில் பிராட்டிக்கு பலப்ரதாநஸங்கல்பாச்ரயத்வம் இல்லை. பதிப்ரவ்ருத்திப்ரோத்ஸாஹநமே உள்ளது என்ற விப்பக்ஷத்தில் இப்ரோத்ஸாஹநத்தைப்பற்றி அவளுக்கு புருஷகாரத்வ வ்யவஹாரமே யுக்தமா? உபாயத்வ வ்யவஹாரம் யுக்தமா? என்று சப்தமாத்ரத்தில் விப்ரதிபத்தி நின்றது.

(6) இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவ்ருத்திக்கும் பிராட்டிஸாக்ஷாத்ஸாதநமாகாமையால் உபாயத்வவ்யவஹாரம் யுக்தமன்றென்றும் இதனால் புருஷகாரத்வ வ்யவஹாரமே ப்ராப்தமென்றும் இவர் பக்ஷத்தில் முடிவு ஏற்படுகின்றது. 'எம்பெருமான் சீற்றந்தணிந்து அபிகம்யனாகும்வரையில் உள்ள உபயோகத்தைப் பற்றித்தான் புருஷகாரத்வ வ்யவஹாரம் யுக்தம். மேலுள்ள உபயோகம் உபாயத்வவ்யவஹாரத்திற்கே ப்ரயோஜகம். லோகத்தில் அந்வய வ்யதிரேகங்களால் ஒரு ஸாதநத்தை நிர்ணயித்து அதற்கு ஸாதநமாக மற்றொன்றை நிர்ணயித்தால் இந்த ஸாதநஸாதநத்தை ஸாதநமென்ன வொண்ணாது. அந்யதா ஸித்தியால் ஸாதநத்வம் கிடையாதாகையால் அப்

படிக்கல்லாமல் ஶப்தப்ரமாணத்தால் ஸாதநமாக ஒன்று சொல்லப்பட்ட போது அது உபபத்தியையநுஸரித்து ஸாக்ஷாத்ஸாதநமானாலும் பரம்பரயா ஸாதநமானாலும் ஸாதநத்வத்திற்கு ஒரு ஹாநியுமில்லை. 'உபாயஶப்தம் வ்யவஹிதஸாதநத்திலும் அவ்யவஹித ஸாதநத்திலும் வர்த்திக்குமென்னுமிடம் ச்ருதிஸ்ம்ருதிலோகஸித்தம். ஸித்தஸாத்யோபாயங்களுக்கும் இவ்விரண்டு ஆகாரம் ஸாத்யபேதத்தாலே ப்ரதிநியதம்' என்று ஸ்ரீஸாரஸாரத்தில் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. த்வயத்தில் உபாயவாசியான ஶரணஶப்த ஸமபிவ்யாஹாரத்தால் விசேஷ்யத்திற்குப்போலே விசேஷணத்திற்கும் உபாயத்வம் ப்ரமிதமாகையாலே விசேஷ்ய த்வாரா உபாயமானாலும் புரோடாச த்வாரா ஆக்நேயேஷ்டிஸாதநமான வ்ரீஹிகளுக்குப்போலே உபாயத்வ ப்ரதிபத்திக்கு ப்ரதிபந்தகமொன்றுமில்லை' என்பது தேசிகன் திருவுள்ளம்.

(7) இப்படி விஷயங்களை விமர்சித்துப் பார்த்தால் தேசிகன் ஸாதித்தவிஷயத்தில் இவர் விப்ரதிபத்திபண்ணுவதற்கு அவகாசமேயில்லை. 'வினைதீர்க்கும் இத்யாதி ஸர்வ ஸ்ரீஸூக்திகளும் ஸமஞ்ஜஸமாகவே இருக்கின்றமையால் இவர் ப்ரதிபாதித்தபடி பாதிக்கவேண்டிய ப்ரஸக்தியே யில்லை.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சந்தா வரவு: 1952 ஹு மார்ச்சு மீ.

சந்தா எண்		பெயரும் விலாஸமும்	வருஷம்	தொகை ரூ	அ
81	ஸ்ரீ	கே. ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், புதுடில்லி.	52	3	0
82	,,	என். கே. ஸ்ரீநிவாஸஐயங்கார், அனந்தப்பூர்.	52	3	0
99	,,	ஆர். ஸந்தானம் ஐயங்கார், மதராஸ்.	52	3	0
102	,,	ரகுநாத ஐயங்கார், பாபநாசம்.	51–52	6	0
140	,,	பி. லக்ஷ்மீநாராயண செட்டியார், மதராஸ்.	52	3	0
154	,,	கே. ஐயாவையங்கார், திருப்பராய்த்துறை.	52	3	0
170	,,	டி. தோதாத்ரி ஐயங்கார், தெப்பக்குளம்.	52	3	0
184	,,	எம். பி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	52	3	0
240	,,	டி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், நடுவக்கரை.	51–52	6	0
251	,,	என். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர்.	52	3	0
255	,,	எஸ். ஸம்பத்குமாரன், கோவில்வெண்ணி.	51–53	9	0
321	,,	ஆர். வரதாசார்யர், சைதாப்பேட்டை.	51–53	9	0
347	,,	எம். ஸ்ரீநிவாஸாசார்யர், காஞ்சீபுரம்.	51–52	5	0
388	,,	டி. வேதாந்தாசார்யர், கல்கத்தா.	52	3	0
410	,,	அப்பா ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கல்யாணபுரம்.	51	3	0
419	,,	கே. பார்த்தஸாரதி ஐயங்கார், பண்ருட்டி.	51	3	0
422	,,	சக்ரபாணி ஐயங்கார், எண்திருமங்கலம்.	51	3	0
424	,,	ஆர். குப்புஸ்வாமி ஐயங்கார், ஹேமப்பூர்.	51	3	0
464		A. வேதாந்தாசார்யர், Bundra	52	3	0
			ஆக மொத்தம் ரூ—	77	0

		முன்பக்கப்படி ரூ—		77	0
624	,,	எம். எஸ். கோவிந்தராஜன், கோயம்புத்தூர்.	51–53	5	0
649	,,	வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், திருவனந்தபுரம்.	52	3	0
694	,,	எஸ். வி. ராகவன், கல்கத்தா.	52	3	0
704	,,	எஸ். சடகோபாசார்யர், கும்பகோணம்.	52	3	0
708	,,	என். பார்த்தஸாரதி, மைலாப்பூர்.	51–53	9	0
712	,,	எம். வரததேசிகாசார்யர், திருவத்திபுரம்.	52	3	0
732	,,	டி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், மயிலாப்பூர்.	51–52	6	0
739	,,	G. நரஸிம்ஹ ஐயங்கார், Camp–Joda West.	52	3	0
755	,,	ஜி. கே. ராமஸ்வாமி ஐயங்கார், புதுடில்லி.	52	3	0
793	,,	வி. ஸி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மதராஸ்.	52	3	0
796	,,	டி. பி. தாதாசார்யர், கள்ளக்குறிச்சி.	52	3	0
814	,,	வி. டி. சேஷாத்ரி தாதாசார்யர், ஆம்பூர்.	51–52	3	8
851	,,	வி. ஸ்ரீநிவாஸாசார்யர், பம்பாய்.	51–52	3	0
852	,,	டி. எஸ். ராகவாசார்யர், ,,	51–52	3	0
866	,,	எஸ். ராமஸ்வாமி ஐயங்கார், ,,	51–53	9	0
982	,,	M. பத்மநாபன், Londa.	52	3	0
1033	,,	எம். ஆர். ராஜகோபால ஐயங்கார், கும்பகோணம்.	51	3	0
1051	,,	கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், அம்பத்தூர்.	52	3	0
1055	,,	எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், திருவள்ளூர்.	52	3	0
1090	,,	ஸி. நரஸிம்ஹ ஐயங்கார், கருந்தட்டாங்குடி.	52–53	3	0
1103	,,	கே. கிருஷ்ணஸ்வாமி பிள்ளை, கன்னுங்குடி.	52	3	0
1140	,,	என். ஆர். எஸ். ஸ்ரீநிவாஸராகவ ஐயங்கார், மயிலாப்பூர்.	52	3	0
1143	,,	எம். ஆர். கே. ராமன், கல்கத்தா.	52	3	0
1087	,,	எஸ். ராஜகோபால தாதாசார்யர், காஞ்சீபுரம்.	52	3	0
1226	,,	என். ஆர். ஸ்ரீநிவாஸன், மதராஸ்.	52	1	0
1228	,,	கே. எஸ். விஜயம், மதராஸ்.	52	3	0
1229	,,	எஸ். கே. ராமாநுஜாசார்யர், திருமவமேடு.	52	3	0
1230	,,	ஆர். சடகோபன், பம்பாய்.	52	3	0
1231	,,	வி. என். எஸ். ஐயங்கார், மதராஸ்.	52	3	0
1232	,,	எ. கல்யாணராம ஐயங்கார், பாபநாசம்.	52	3	0
1234	,,	கே. அனந்தபத்மநாபன், திருவனந்தபுரம்.	52	3	0
		சந்தாஎண் தெரியாதது		1	8
		ஆக மொத்தம் ரூ—		187	0

Regd. No. M. 4437

17 APR 1952
MADRAS

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

நந்தன ௵ வைகாசி ௴-1952 ௵ மே-ஜூன் ௴

[உத்தராயணம்-வஸந்த ருது வ்ருஷப-௴]

14—5—52	1௳	புதன்கிழமை	...	சூந்யதிதி. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)
15—5—52	2௳	வியாழக்கிழமை	...	வ்ருஷப க்ருஷ்[illegible]ஸப்தமிதிதி.
20—5—52	7௳	செவ்வாய்க்கிழமை	...	ஸ்ரீ வைஷ்ணவ [illegible]காதசி.
23—5—52	10௳	வெள்ளிக்கிழமை	...	● ஸர்வ அமாவாஸ்யை.
31—5—52	18௳	சனிக்கிழமை	...	அஷ்டமி திதி.
1—5—52	19௳	ஞாயிற்றுக்கிழமை	...	நவமி திதி.
2—6—52	20௳	திங்கட்கிழமை	...	அதிதி.
4—6—52	22௳.	புதன் கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
5—6—52	23௳	வியாழக்கிழமை	...	த்வாதசி-த்ரயோதசி திதித்வயம்.
6—6—52	24௳	வெள்ளிக்கிழமை	...	சதுர்தசி திதி; விசாகம்; *ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
8—6—52	26௳	ஞாயிற்றுக்கிழமை	...	ப்ரதமை திதி-கேட்டை. ஸ்ரீ அஹோபிலமடம் 35வது பட்டம் (களத்தூர்) *ஸ்ரீ ரங்கநாதயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
12—6—52	30௳	வியாழக்கிழமை	...	வ்ருஷப க்ருஷ்ண பஞ்சமி திதி.
13—6—52	31௳	வெள்ளிக்கிழமை	...	வ்ருஷப க்ருஷ்ண ஷஷ்டி திதி.
14—6—52	1௳	சனிக்கிழமை	...	சூன்ய திதி; மிதுநரவி 17-39. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)

Printed by J. RANGACHARIAR, Srikaryam, Sri Ahobila Mutt, at Malola Press, 30, Panagal Street, Tiruvallore.
Edited and Published by P. S. SrinivasaDesikachariar, M.A., B.L., No. 2, Audiyappa Mudali Street, Vepery, Madras 7